THE COUNTRY HERALD.

கிராம தூதன்.

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

" வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.

மலர்: ௩ | 1941 ஜூன்—விசு, ஆனி | இதழ் ௬

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை.

நன்மையா னியற்ற ஞானமும், நலமல்
லாததை விரும்பிடா திருக்குந்

தன்மையு மருள்வாய் தாயனே; என்மேல்
தயவுறின் அவைவருந் தாமே;

புன்மையேன் அவ்வா றுன்றய வுறவோர்
புண்ணியஞ் செய்திலே னாகில்,

சென்மநான் என்ன செய்வதற் கெடுத்தேன்,
தெய்வமே, செயலறியேனே.

—திருவனந்தபுரம் இலக்குமண பிள்ளை.

தாயனே! யான் நன்மை இயற்ற ஞானமும், நலமல்லாததை விரும்பிடாது இருக்குந் தன்மையும அருள்வாய். என்மேல் தயவு உறின் அவை தாமே வரும். அவ்வாறு உன் தயவு உற புன்மையேன் ஓர் புண்ணியம் செய்திலேன் ஆகில் என்ன செய்வதற்கு நான் சென்மம் எடுத்தேன்? தெய்வமே! செயல் அறியேனே!

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.

I. துறந்தால், கொடும் அகங்காரம் துறக்க; ஓர் சொல்லுக்குவாய்
திறந்தால், அஃதுண்மைக் காகத்திறக்கச்; சிதைவில் புகழ்
சிறந்தால், அது நன்மை செய்து சிறக்கத்; திரியுலகிற்
பிறந்தால், உபகரிக்கப் பிறக்கப் பெரும் பீடுறவே.

—திருவனந்தபுரம் இலக்குமண பிள்ளை.

II. உங்களுக்குள்ளே உறங்கும் சத்திகளை நீங்கள் உயிர்ப்பிக்க முயலுங்கள். ஊக்கம் உறுதி உழைப்பு இம் மூன்றும் உங்கள் வாழ்வைச் செப்பனிடத்தக்க செல்வங்களென உணருங்கள். அவற்றின் துணை கொண்டு அறிவையும் ஆண்மையையும் பெருக்குங்கள். உங்கள் அறிவைப் பிறர்க்கு விற்று விடாதீர்கள். எதனையும் ஆய்ந்து உண்மை கண்டு அதன்படி செயல் புரியுங்கள். உண்மைக்கு அடிபணியத் தயங்காதீர்கள்; அதற்கு மாறானவற்றை விளக்கிக் காட்டி அவற்றை அழிப்பதற்கு அஞ்சாதீர்கள். பகுத்தறிவை விசாலப்படுத்துங்கள். அதற்குள்ள விலங்குகளை முரித்தெறியுங்கள் ....புதுப் பொருள்களைக் காணும் ஆற்றலை ஆராய்ச்சித் திறனை வளருங்கள்......... சமூக ஒற்றுமைக்காக உழையுங்கள். ஆடம்பரச் செலவுகளை அகற்றுங்கள். எளிமையும் தூய்மையும் அன்பும் அமைதியும் பொருந்திய வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள்....... உள்ளத்தைச் சீர்திருத்த எண்ணங்களிற் செல்லப் பழக்குங்கள். அறநெறி போற்றுங்கள். கள்ளம் கபடு சூது வாதுகளை அகற்றுங்கள்........ ஒப்புயர்வற்ற சிறந்த குறிக்கோள் கொண்டு நல்வழி நடந்து புகழுடன் வாழ எண்ணுங்கள். உங்கள் ஒப்பற்ற அரிய வாழ்க்கை இளைஞர்கள் அனைவருக்கும் இணையற்ற முன்மாதிரியாகத் திகழட்டும்.

செங்குந்தர்மாநாடு. பரமகுடி இருளாண்டி முதலியார்.

III. தமிழ் கிரீக் மொழியினும் மேன்மையும் திட்பமும் வாய்ந்தது; இலத்தீனினும் வளம் வாய்ந்தது; ஆற்றலினும் பூரணத் தன்மையிலும் அங்கிலத்தையும் செர்மன் மொழியையும் ஒத்திருப்பது என்றார் பண்டிதர் வின்சுலோ. வடமொழியின் உதவியின்றி இன்றும் என்றும் நிலைபெற்றுத் தமிழ் நன்கு வழங்கக்கூடியது என்றார் பண்டிதர் கால்டுவெல். தமிழைப் போல ஆற்றலும் சுருக்கமும் அமைந்த மொழி வேறில்லை; மனத்தின் தன்மையைத் தெளிவுற விளக்கும் மெய்க்கலைமொழி தமிழையன்றி வேறில்லை என்றார் பெர்சிவல் பாதிரியார்.

தமிழ்மொழி நன்கு பேணப்படுதற்கு அதனைத் தாய்மொழியாக உடைய தமிழர் முன்னேற்றமடைய வேண்டும். தமிழர் முன்னேற்றம் அடைவதற்குத் தமிழரது பொருளாதார நிலை சிறக்கவேண்டும். அது சிறத்தற்குத் தமிழருட் செல்வர்களா யிருப்பவர்களும் சொல்லாற்றல் உடையவர்களும் சமுதாயத்தில் உள்ள ஏழை மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வருந்தாதபடி அவரவர்க்கு உரிய தொழிலும் உணவும் அளித்தற்கேற்ற வாயில்களை வகுக்க வேண்டும். தொழில் வளர்ச்சியே, வறுமையை எளிதில் ஒழிக்கும்.

(தமிழர் சமயம்.) பேராசிரியர் சுப்பிரமணியபிள்ளை.

3. தலையங்கம் :

தபசில் வகுப்பினரும் பின்னடைந்த வகுப்பினரும் முன்னேறுவதெப்படி?

To India

"Thou claimest equality among people and races,
And thou wouldst not have it among castes!...
Thou shalt be the sister of all nation only when
all thy sons among themselves are brothers,
And all thy daughters, their sisters and equals."

Paul Richard.

மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும் —திருவள்ளுவர்

முன்னுரை

தபசில் வகுப்பினரிலும் மற்றும் பின்னடைந்த வகுப்பினரிலும் கல்விச் செல்வம் பொருட்செல்வம் அருட் செல்வத்தாலும் செல்வாக்காலும் சிறந்தவர்கள் சிலரேனுமில்லாமலில்லை; பிற வகுப்பினருள், இவை நிரம்பப் பெறாது அவதிப்படுபவருமுண்டு. என்றாலும், இவ்வகுப்பினர்களில் பலர் இவை நிரம்பப் பெறாதிருத்தலின், இவர்களையொட்டி, இதனை ஆராய்வதே உசிதமாகும். இவர்களுடைய விருத்திக்கானமுறை, பிறருக்கும் பொருந்தும்.

இன முன்னேற்றமும் தேசிய முன்னேற்றமே.

ஒவ்வொரு இனமும் முன்னேறும் பொழுது, தேசமும் முன்னேறியதாகும், எதாமொரு சங்கிலிக் கண்ணே பலமற்றிருந்தாலும் அச்சங்கிலி முழுதும் பலமற்றதாவதுபோல, எதாமொரு இனம் கெட்டு நொந்து போயிருந்தாலும் தேசமும் நலமற்றதாகும். அவ்வினம், பிறவினங்களுக்கும் தேசத்துக்கும் பெரும் பாரமுமாகும்.

குருதி, நீரிலும் தடித்ததென்பதுபோல (Blood is thicker than water,) குடும்பமும் இனமும் தேசத்தினும் தடித்திருக்கவே காண்கிறோம். பல வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்து பிற கட்சிகளைத் தூற்றியோ கண்டித்தோ வருபவர்களும் இனமேடைகளில் ஒருவரோடொருவர் கலந்தும் போட்டி போட்டும் இன நலன்களைப் பெருக்கி வரவும் காண்கிறோம். முன்னேறி யிருக்கும் இனங்கள் அப்படி வெளிப்படையாகக் கலவாத பொழுதும், ஒன்று சொன்னாற்போல இன நலத்தைப் பெருக்கி வரவுங் காண்கிறோம். குடும்ப நலம்-இன நலம் தேச நலம் இரண்டிற்கும், இனநலம்-தேச நலத்திற்கும் விரோதமாகச் செல்லக் கூடாதென்று சொல்லலாமேயொழிய, அப்படியும் முன்னேறி யிருக்கும் இனங்கள் செய்து வர, இனிமேலாகவே முன்னேற வேண்டியதிருக்கும் இனங்கள் தேச நலத்திற்குப் பாதகமின்றி இன நலத்தைக் கவனிப்பதும் கூடாதெனச் சொல்ல நியாயமில்லை.

தபசில் வகுப்பினர் பின்னடைந்திருக்கும் வகுப்பினர்களிடையில் அவ்வவ்வின வகுப்பினர்கள் செய்து வரக்கூடிய வேலைகளில் ஆயிரத்திலொரு பங்குகூடப் பிறர்செய்து கொள்ள முடியாது. பிறர் எவ்வளவுதான் அவர்களோடு நெருங்கிப் பழகியபோதிலும் தண்ணீரும் எண்ணெய்யும் சேருவதுபோல இருக்குமேயன்றித் தண்ணீரும் தண்ணீரும் கலந்ததுபோலக்களங்க மற்றிராது. முன்னேறியிருக்கும் இனங்களின் நிலைமைக்கு இவ்வினங்கள் வர எவ்வளவோ வேலைகள் செய்ய வேண்டியதிருக்கும் நிலைமையில், இவர்களுக்கென இவர்களும் இவர்கள் மூலம் பிற தலைவர்களும் அரசாங்கமும் பெரும் முயற்சிகள் தனிப்படவும் செய்தாகவேண்டும்.

பண்டைத் தமிழர் நிலைமை.

பழந்தமிழர், தத்தம் இருப்பிடத்திற்கேற்ற தொழில்களைச் செய்து வந்தனர். அவர்களுக்குள் அவைபற்றி வேற்றுமையுமிருக்கவில்லை. போதியவருவாயும் சாவகாசமுமிருந்தன. கல்விச் செல்வத்தையும் அருட்செல்வத்தையும் வளர்த்து வந்தனர். ஆடவரும் பெண்டிரும், உழவரும், வணிகரும், பிணிதீர்ப்பவரும், துணி நெய்பவரும், பானை சட்டி வனைபவரும், பிறரும் தத்தம் தொழிலையும் விடாது, சிறந்த புலவர்களாகவும் விளங்கினர்.

பிற்காலத் தற்கால நிலைமை.

அதன்பின், சனப்பெருக்கம் அதிகமாகிவர, உழையாதுண்ணும் அந்தணரும் அரசரும், உழுவித்துண்ணும் வேளாளரும் பெருகி வந்தனர்; மனமுவந்தும் வலுவந்தமாகவும் அவர்களுக்குதவியது போக மிஞ்சினால்— அப்படி மிஞ்சுவதே, உழைப்பவர்களுக்குதவக் கூடியதாயிற்று. இப்படியாக வளர்ந்து வந்த வறுமையிலும், அவர்கள் தங்கள் பழமையையும் குலத்தொழிலையும் குலப்பெருமையையும் விடமுடியவில்லை. நல்லவர்களோடும் கற்றவர்களோடும் பழகவும் கற்கவும் போதிய சாவகாசமுமில்லாது போயிற்று. நல்லவற்றைக் காணவும் கேட்கவும் கையாளவும் முடியாது போயிற்று; விளக்கமும் நாளடைவில் அற்றுப் போயிற்று.

கம்பர் ஒட்டக்கூத்தர் காலத்திற்குப் பின் தமிழ்ப் புலவர்களுக்கிருந்த அரசாங்க ஆதரவும் வெகுவாகக் குறைந்து போயிற்று. நாட்டில் பட்டினியும் முன்னிலும் அதிகமாயிற்று. சிலர் தம்முயிரைக் காப்பாற்றி வருவதற்கு முன்னிலும் அதிகமாக — செத்த மாட்டை நண்டை பூனையை தவளையை — தின்கவேண்டியதுமாயிற்று. இப்படியாகப் பல இனங்கள் சில தலைமுறைகளாக உடலுரமும் உணர்ச்சியுங்கெட்டு நடைப்பிணமாகச் சஞ்சரிக்கலாயினர். இந்த நிலைமையில் வந்த அங்கில ஆட்சியையும் பாதிரிமாரின் கல்விச் சாலைகளையும் பிராமணர்கள் தங்கள் சமயச் செல்வாக்கைக் கைவிடாதும் நாடார்களில் சிலர் கிறிஸ்துவ மார்க்கத்தையே சேர்ந்தும் கல்வி கற்றனர்; உத்தியோகங்களில் அமர்ந்தனர்; இவர்களைப் பார்த்து, வேறு சிலரும் அங்கிலம் கற்றனர்; உத்தியோகங்களிலமர்ந்தனர்; காலத்திற்கேற்ப, பிறதொழில்களும் செய்ய ஆரம்பித்தனர். இத்துணைக்கும் விழியாதிருந்த நண்பர்களே பின்னடைந்த வகுப்பினர்களாக இருக்கின்றனர். பாதிரிமார்களோடும் அங்கில அதிகாரிகளோடும் நெருங்கிப் பழகியும், அப்படிச் சந்தர்ப்பங்களைத் தங்கள் பின் சந்ததியார் இனத்தாரின் நல்வாழ்க்கைக்கு உபயோகித்துக் கொள்ளாதவர்களைச் சேர்ந்தவர்களே; அனேகமாகத்தபசில் வகுப்பினர்களாக இருக்கின்றனர். இப்படியாகக் கெட்டுப் போயிருப்பவர்களுக்கு உயிர் வரவேண்டுமென்றால், முதலாவதாக, இவர்கள் பணத்தைத் தேடவேண்டும்; வயிறு நிறைய உண்ணவேண்டும்; கல்வியும் பின்னரே வேண்டும்; அதன்பின் கலையறிவில் சிறக்க, இவர்களுக்குப் போதிய சாவகாசமும் வேண்டும்; பிறகு இவர்களுடைய அருட்செல்வமும் செல்வாக்கும் வளரவேண்டும்.

முன்னேறியிருக்கும் வகுப்பினர் அவசியம் பிற வகுப்பினர் முன்னேறுவதற்கும் உதவ வேண்டும்.

நம் நாட்டில் காணும் இந்து முசுலீம் வேற்றுமைகளையும், நம்மாகாணத்தில் காணும் ஆரிய திராவிட வேற்றுமைகளையும், முன்னேறிய வகுப்பினர்கள் தபசில் வகுப்பினர் உட்பட்ட பின்னடைந்த வகுப்பினர்கள் வேற்றுமைகளையும் அலசிப் பார்ப்போமென்றால், முந்தியவர்கள் கல்விப்பொருள் செல்வப் பொருள் உத்தியோகம் செல்வாக்கு நிரம்பப் பெற்றவர்களாகவும் பிந்தியவர்கள் அவற்றைப் போதிய அளவு பெறாதவர்களாகவும் இருக்கவே காண்கிறோம். அதனோடு, முந்தியவர்கள் பிந்தியவர்களைச் சகோதரர்களாக—ஏன், மனிதர்களாகக்கூட அனேகமாக மதிப்பதில்லை;

அரசாங்கம் ஏகதேசம் பிந்தியவர்களுக்குதவுவதுங்கூட முந்தியவர்களுக்குப் பிடிப்பதில்லை.

முன்னேறி யிருப்பவர்கள் அதிவேகமாக முன்னேறிப் போய்க்கொண்டிருக்க, பின்னடைந்தவர்கள் மெதுவாகவே முன்னேறி வருவதால், நமக்குள் வேற்றுமைகளும் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. ஒருமைப்பாடில்லாத குடி ஒரு மிக்கக் கெடுவது திண்ணம்; ஆகையால், நமக்குள் வளர்ந்துவரும் வேற்றுமைகள் குறையவேண்டும், ஒழிய வேண்டும்; ஒற்றுமையும் வளரவேண்டும். அதற்கு நாம் சாதி சமயபேதமின்றி, பிறரிருக்கும் இழிவான நிலைமையில் கவலை கொண்டவர்களாக—எவருக்கும் தம்முடைய நிலைமைக்கும் கேவலமான நிலைமையில் பலரிருப்பார்கள்-நம்மாலியன்ற உதவியெல்லாம் அவர்களுக்குச் செய்து அவர்களை முன்னேற்றி வரவேண்டும். மேடைகளிலேறிச் சகோதரர்களென்று பேசினாற்போல், பத்திரிகைகளில் எழுதினாற்போல் உச்சி குளிர்ந்து விடாது; உச்சி குளிர்ந்திட வேண்டுமென்றால், எண்ணெய் எடுத்து உச்சியில் வைத்தாக வேண்டும். ஒருமைப்பாடு வளரவேண்டுமென்றால், பிறரையும் உண்மையாகவே சகோதரர்களாகப் பாவித்து அவர்களுக்குதவி செய்யவேண்டும். அரசாங்கம் செய்யக்கூடியன அனைத்தையும் சீக்கிரம் செய்து அவர்களைப் பட்டினி பசியில்லாத நிலைமைக்கேனும் விரைவில் கொண்டு வரத் தூண்ட வேண்டும்.

பிற வகுப்பினர் சங்கடங்களைத் தம் சங்கடங்களாகவும் பிற வகுப்பினர் மகிழ்ச்சியை தம் மகிழ்ச்சியாகவும் எவ்வளவிற்குக் கொள்கின்றார்களோ அவ்வளவிற்கே சில பல வேற்றுமை யுடையாரையும் ஒரே நாட்டாராகக் கொள்ளக்கூடுமே யன்றி அவ்விதம் கொள்ளாரையும் ஒரே நாட்டில் வசிக்கும் காரணங் கொண்டு ஒரே நாட்டாராகச் சொல்லமுடியாதென நிலைநாட்டியிருக்கும் திரு. (John Stuart Mill) நாட்டார் (Nation) இலக்கணத்திற்கு நாம் சீக்கிரம் இலக்கியமாகவேண்டும். அப்படி இலக்கிய மாவதற்கு, நாமொவ்வொருவரும்—முன்னேறி யிருப்பவர்களும், பிற வகுப்பினருக்கு உதவி செய்தாகவேண்டும்.

படிப்பிலும் பணமே அவசரமாக வேண்டும்

கல்வியைக் கற்று, உத்தியோகம் பெற்றுப் பணத்தைத் தேடுவதும் ஒரு வழிதான்; அப்படியும் பணமுள்ளவர்கள் செய்யவேண்டியதுதான்; ஆனால், அப்படிப் பிறருஞ்செய்யச் சில வருடங்களேனுஞ் செல்லவேண்டும். எடுத்த உடனேயே எல்லாரும் படிக்க ஆரம்பிப்பது வேகிற வீட்டுத்தீயை யவிக்க, கிணறு வெட்ட ஆரம்பிப்பதுபோலுமாகும். படித்தோ படிக்காமலோ ஒவ்வொருவருக்கும் வேண்டியது, வயிறு நிறைய உணவு. அதனை முதலாவதாகப் பார்த்துக்கொண்டால், படிப்பையும் உடனே ஆரம்பித்துக்கொள்ளலாம். படிக்கவும், படிக்கவைக்கவுமே பணம் வேண்டாமா?

திருவள்ளுவரும் பொருளில்லாருக்கு இவ்வுலகமில்லை; அருளில்லாருக்கு அவ்வுலகமில்லை யென்றார். அன்பின் குழவியாகிய அருளும், செல்வச் செவிலியாலுண்டு; ஆதலால், பணம் மறுமைக்கும் உதவும். ஆகையால், எதற்கும் ஒவ்வொருவரும், தமிழ் மறை விதிக்கிறபடி, அன்பொடு போதிய பணந்தேடியாகவேண்டும்; அஃதில்லையேல், முன்னேற்றமுமில்லை.

வறுமைப் பிணி விரைவில் ஒழிந்திடும் என்னும் நம்பிக்கையும் சீக்கிரம் ஏற்படவேண்டும்.

"வறுமைப் பிணி இன்று நேற்று தாக்கியதா? பல தலைமுறைகளாக வளர்ந்துவந்த கடன், இன முன்னேற்ற வேலைகள் ஆரம்பிக்கவுமே தீர்ந்துவிடுமா? சில மாதங்களேனும் செல்லவேண்டாமா?" என நினைக்கலாம். வறுமைப் பிணி தீரச் சில மாதங்கள் காணா; பல மாதங்களேனும் சில வருடங்களேனும் வேண்டும். என்றாலும், வயிற்றுப் பாட்டிற்குப் போக மிஞ்சும் பணம் கிடைத்து வரவுமே, வறுமைப்

பிணியும் காலாந்தரத்தில் ஒழிந்துவிடக்கூடும் என்னும் நம்பிக்கையும் பிறந்திடும். அவ்வித நம்பிக்கை பிறக்கவுமே, படிக்கவும் படிக்கவைக்கவும் மனிதத்தரமாகவும் பிறருக்குபகாரமாகவும் வாழவும் மனம் வரும். இந்த நிலைமையில், பிறர் தூண்டும் நற்காரியங்களும் எளிதில் பலிதமாகும். அவற்றை அவர்கள் அக்கறையுடன் தாங்களாகவும் செய்து முன்னேறி வருவார்கள். (தங்கப்பாளம் என்னும் கதையைப் படிக்க. முதல் மலர் 313-316-ம் பக்கங்கள்.)

வயிற்றுப் பாட்டைக் கழிப்பதற்கும் போதிய வரவில்லாதவன், நாணயத்தைக் காப்பாற்றி வரமுடியாது; உண்மையாக வாழவும் முடியாது; அவன் நற்குணசீலனுகவும் நல்லொழுக்க முடையவனுகவும் வாழ்ந்து வருவதும் சிரமம். அவன் தன் வயிற்றுப் பாட்டைக் கழிப்பதற்கும் களவையும் திரியாவரத்தையும் கையாளும்படி நேரினும் நேரும்; அப்படிச் செய்யாதிருப்பின், பட்டினியும் பசியும் அவனைப் பாழ்படுத்தும். அத்தகைய குடும்பங்கள் நிறைந்திருக்க, அவற்றின் பொருளாதார நிலைமையையும் ஒழுக்கத்தையும் திருத்தாது இன முன்னேற்ற வேலைகள் செய்வதென்றால், கறையான் அரித்துக்கொண்டிருக்கும் தூண்களின்மேல் கட்டடங்கட்டிப்போவதாகவே முடியும்; செய்யும் வேலை யெல்லாம் வியர்த்தமாகவே போகும். இது வரை நம் மாகாணத்தில் நடந்துவரும் கிராமப் புனருத்தாரண வேலைகள் உருப்படி யாகாதிருப்பதற்கு, இதுவே காரணம். இதனைப் பிரத்தியட்சமாக அறிந்த பின்னேனும், நாம் நம் வேலைமுறையை மாற்றவேண்டாமா?

(தொடரும்)

---

4. விபசாயம்:

நம்மாகாணத்தின் நெல்விளைவையும் வியாபாரத்தையும் பற்றிய அறிக்கை 1934.

II

அரிசியின் நிறம்.

அரிசி சிவப்பாக இருப்பினும் ஆலையில் அதனை அதிகமாக அரைப்பதின் மூலம் அந்தச் சிவப்பை நீக்கி, வெள்ளையரிசியாகத் தோன்றும்படி செய்துவிடலாம்; என்றாலும் சாதாரண வெள்ளையரிசிக்கும் அதற்கும் வித்தியாசம் தெரியவே செய்யும். மலையாளம் சில்லாவும் தென்கன்னடம் திருநெல்வேலி சில்லாக்களில் சில பாகங்களும் தவிர்த்து மற்ற இடங்களிலெல்லாம் வெள்ளையரிசியே விரும்பப்படுகிறது. வெள்ளையரிசியில் சிவப்பு அரிசியும் கலக்கப்படுமென்றால், அவ்வளவிற்கேனும் அரிசியின் விலையும் குறையும்.

அரிசியின் தன்மை.

சில அரிசி மெதுவாகவும் சில கற்போன்று கடினமாகவு மிருக்கின்றன. மெதுவான அரிசியை ஆலையில் அரைக்கும்போது அது அதிகமாகவும் முரியும்; ஆனால், அதிகப் பளபளப்பாக இருக்கும்; அதனால் அதிக விலைக்கும் கிரயம் போகும். பொதுவாக, கார் தினுசுகள் மெதுவாக இருக்கின்றன; அவற்றைப் பச்சையாக அரைக்கமுடிவதில்லை; புழுங்கலாக்கி அரைப்பதுதான் பொருத்தமாகும்.

நிலத்தின் தன்மைக்கும் உரத்திற்கும் பாசன வசதிக்கும் ஏற்ப, அரிசியின் தன்மை

யும் மாறும். திண்டுக்கல், ஈரோடு, சேலம் முதலிய இடங்களில் கொழுஞ்சிக் குழையே முக்கிய உரமாகப் போடப்படுகிறது; கிணற்றுத் தண்ணீரே இறைத்துப் பாய்ச்சப்படுகிறது. அந்தப் பிரதேச நெற்கள் உயர்ந்த தரமாகக் கருதப்படுகின்றன. கீழ்க் கோதாவரி தீரவாச நெற்களைக்காட்டிலும் மேல்நாட்டு (upcountry) நெற்களே பச்சைக்கு விரும்பப் படுகின்றன. நெற்களின் தன்மையிலிருக்கும் வித்தியாசம் போலவே, அவற்றின் சத்திலும் வித்தியாசம் இருக்கக்கூடும். சேற்று நிலத்து நெற்களைக் காட்டிலும் புன்செய்களில் தோட்டங்களில் விளையும் நெற்கள் அதிகச்சத்துள்ளனவென்று கர்னல் மெக்காரிசன் சொல்லுகிறார். தென்னூலிச்சந்தையில் எப்பூரிலிருந்து வரும் ஆத்திரக்காத நெல்லும் சேலம் சந்தையில் இராசிபுரம் தாலுகாவிலிருந்து வரும் புதுப்பட்டிச் சம்பாவும், திண்டிவனம் சந்தையில் இரெட்டணையிலிருந்து வரும் சம்பாவும், திண்டுக்கல் சந்தையில் சித்தயன்கோட்டைச் சம்பாவும் சிறந்ததாகக் கருதப்படுகின்றன.

அரைவைக்கான சௌகரியம்.

நாட்பட்டு அறுப்பதினால், அரைவையில் அதிகமாகவே முரியும். தஞ்சாவூர்நெல் அனேகமாகப் பச்சைக்குதவுவதில்லை. கஞ்சம் குண்டூர் கோதாவரி நெல்லூர் நெற்கள் பச்சையாகவே அரைத்து விற்கப்படுகின்றன. வட சர்க்காரிலும் (Circars) சிதம்பரத்திலும் தாள் பச்சையாக இருக்கும்பொழுதே அறுக்கப்படுகிறது. வயலிலேயே மூன்று நான்கு நாட்கள் போட்டிருந்து பிறகு கட்டுகளாகக் கட்டி ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிவைக்கப் படுகிறது. பிறகு சுமார் நான்கு மாதம்வரை சமுசாரி சௌகரியம்போலப் பிரித்து எடுத்து அடிக்கப்படுகிறது. தஞ்சாவூர் சில்லாவில் நெல் முறுகும்வரை காத்திருந்து, அறுத்த அன்றைக்கே அடித்துவிடப்படுகிறது. இது காரணத்தால், தஞ்சாவூர் சில்லாவிலும் சிறுமணி நெல் விளைந்தாலும் சிதம்பரம் சிறுமணி நெல்லைத்தஞ்சாவூரார் சாப்பாட்டிற்காக வாங்குகின்றனர். தஞ்சாவூரில் சாதாரணமாக வாரத்திற்கு அடைப்பதால் நில முதலாளியும் கூடவேயிருந்து நெல்லை உடனே அடித்துவிட வேண்டியிருக்கிறது. வடசர்க்காரில் கட்டுக் குத்தகைக்குப் பாடுபடுவதே வழக்கமாக இருப்பதால், சமுசாரி தன் சௌகரியம்போல் நெல்லை அடித்துக்கொள்ளுகிறான். தாள் பச்சையாயிருக்கும்போதே நெல்லை அறுத்துவிடுவதால், நாலு மாதங் கழித்தே யடித்தாலும் நெல் அவ்வளவாக முறுகுவதுமில்லை, முரிவதுமில்லை.

வயல்களைக் கோடையில் உழுதுபோடுவதாலும், நீர்க்கட்டில் நெல்விளைவதாலும், நெல் முற்றுகிற பருவத்திலும் அதற்குப் பின்னும் கதிர் சாய்ந்து தண்ணீரில் மடங்குவதாலும், பலவேறு நிலமையில் விளைந்த நெற்களையும் பல வேறு தரமான நெற்களையும் ஒன்றாகச் சேர்ப்பதாலும் அரைக்கும்போது முரிவு அதிகமாகிறது.

நல்ல விளைவு.

மொலகுலுகுலுவும் கிச்சிலிச் சம்பாவும் (G. E. B. 24.) அதிகமேனியே கொடுக்கின்றன. இதுகாரணத்தால், கிச்சிலிச்சம்பாவிற்கு அனேக இடங்களில் பிரியமிருந்துவருகிறது. சேலம் கோயம்புத்தூர் ஈரோடு சந்தைகளில் தஞ்சாவூர் நெல்லென்றால் மட்டையும் கலந்திருக்குமென்றே கருதப்படுகிறது. மைசூர் இந்துப்பூர் நெற்கள் உயர்ந்த தரமாகவே கருதப்படுகின்றன. நெல்லூர் குண்டூர் கோதாவரி சில்லாக்களில் ஆலைக்காரர்களே நெல்லை வாங்குவதால் அரைக்கும்பொழுதே நெல்லின் தன்மையைக் கவனித்துக்கொள்ளுகிறார்கள்; தவிரவும், மாதிரியைச் சோதித்து மட்டைக்கு இவ்வளவெனக் கழித்துக்கொள்ளவும் செய்கிறார்கள்.

(தொடரும்)

5. கூட்டுறவு :

சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை

IX

கழகம் சிபார்சு செய்யும் கிராமப்புனருத்தாரண அமைப்பு.

பஞ்சாபில் கிராமாபிவிருத்தி கமிசனர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். (இப்பொழுதில்லை ப-ர்) பம்பாயில் கூட்டுறவுப் பதிவாளரே கிராமாபிவிருத்தித் தலைவராகவுமிருக்கிறார். ஐக்கிய மாகாணத்தில் கிராமாபிவிருத்திக்கென ஒரு தனி அதிகாரியும் இருந்து வருகிறார். (வங்காளத்திலும், ஒரு தனியதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். ப-ர்.) பம்பாயிலும் ஐக்கிய மாகாணத்திலும் மாகாணக்கழகங்களும் சில்லாக் கழகங்களும் வேலை செய்து வருகின்றன. மாகாணக் கழகங்களிலும் சில்லாக் கழகங்களிலும் உத்தியோகமில்லாதவர்களும் இருக்கின்றனர். சில்லாக் கழகங்களுக்கு ஐக்கிய மாகாணத்தில் பதிவிக் கலக்டர் அமைச்சராகவும் பம்பாயில் உதவிப் பதிவாளர் அமைச்சராகவும் இருந்து வருகின்றனர்.

நம் மாகாணத்திற்கும் ஒரு மாகாணக் கழகம் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு முக்கிய அபிவிருத்தி யிலாகா மந்திரி தலைவராகவும் அரசாங்கக் கீழ் அமைச்சர் (Under Secretary) அமைச்சராகவுமிருப்பார். அபிவிருத்தி யிலாகாத் தலைவர்களும் உத்தியோகமில்லாதவர்கள் சிலரும் அதில் அங்கத்தினர்களாகவுமிருப்பார்கள். சில்லாக் கழகங்களுக்குக் கலக்டர் தலைவராக இருப்பார். அவற்றில், அபிவிருத்தி யிலாகா அதிகாரிகளும் உத்தியோகமில்லாதவர்கள் சிலரும் அங்கத்தினர்களாக இருப்பார்கள். சில்லாக் கழகங்கள் மாகாணக் கழகங்களுடைய திட்டத்தை நிறைவேற்றி வைக்கும். தாங்களாகவும் திட்டங்களையும் நடைமுறையையும் மாகாணக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இந்தக் கழகங்கள் வெறும் யோசனை சொல்லும் கழகங்களாக இல்லாமல் பல இலாகாக்களையும் இணைக்கும் கழகங்களாக இருக்கும்.

கிராமக்கூட்டுறவுச் சங்கங்களின் வேலைகளையும் கிராமப் பஞ்சாயத்துக்களின் வேலைகளையும் கவனிக்கவும் அவற்றின் மூலமாகக் கிராமத்தைவிருத்தி செய்யவும் கிராமத்தொண்டர்களும் நியமிக்கப்படுவார்கள். அவர்களுக்குப் போதிய பயிற்சியும் சம்பளமும் கொடுத்து வரப்படும்.

கிராமக்கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தினர்களின் விபசாயத்தை விருத்தி செய்யவும் அவர்களுடைய விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்றுத்தரவும் அவர்கள் நன்றாக வாழவும் உதவும். விபசாய விருத்திச் சங்கங்களும் நிலத்திருத்தச் சங்கங்களும் குடியேற்றச் சங்கங்களும் விதைச் சங்கங்களும் இவைபோல்வன பிறவும் ஆதரிக்கப்படும். நல்வாழ்க்கைச் சங்கங்கள் பஞ்சாயத்துச் சங்கங்கள் பலசரக்குச் சங்கங்கள் தனியாக வேண்டியதில்லை. ஒரே சங்கத்தில் கூட்டு வேலையும் கூட்டுப் பொறுப்பும் கூட்டு ஜாமீனையும் சேர்த்துக் கிராம முன்னேற்றத்திற்கு வேண்டிய வேலைகளெல்லாம் அந்த ஒரே சங்கத்தின் மூலமாகச் செய்து வரப்படும். கிராமங்களில் சாதாரணமாகத் திறமையுள்ளவர்களில்லாததால் தான் இதுவரை செய்து வந்த வேலைகளால் பிரயோசனமிருக்கவில்லை. இனிச் சங்கங்களுக்குச் சம்பள அமைச்சர்கள் நியமிக்கப் படுமாதலாலும், கிராமத் தொண்டர்களை நியமிக்கப் போவதாலும் கிராம முன்னேற்ற வேலைகளைச் சரியாகச்

செய்து வரக்கூடியவர்கள் எளிதில் அமைவார்கள்.

கிராமங்களின் பொருளாதார நிலைமை.

தானியங்கள் பயறுகள் சாகுபடியாகி வந்தது குறைந்து வருகிறது. நெற் சாகுபடியாகும் பரப்பும் வருடாவருடம் குறைந்தே வருகிறது. வியாபார மகசூல்களோ, அதிகமாகவும் சாகுபடியாகி வருகின்றன. சனத் தொகையோ வருடாவருடம் அதிகப்பட்டுக் கொண்டே வருகிறது. ஒரு குடும்பத்துக்கு ஐந்தேக்கர் நிலமுமாவது இருந்தால்தான் கவலையற்றுக் காலங்கழிக்க முடியுமென்று சொல்லப்படுகிறது. நம்மாகாணத்தில் ஒரு குடும்பத்திற்குச் சராசரி மூன்றேக்கர் நிலந்தான் அமைகிறது. (அனேக குடும்பங்களுக்கு நிலமே கிடையாது ப—ர்.)

கழகத்தின் சிபார்சு சாத்தியமா?

சாகுபடி பரப்பை அதிகமாக்கியும் பாசன வசதிகளை அதிகப் படுத்தியும் அதிகமாக உரமிட்டும் திருத்திய நல்ல விதைகளை விதைத்தும் தீவிரமாகச் சாகுபடி செய்தும் நம் மாகாண உணவுக்குறைவையும் விளைவுக்குறைவையும் சரிப்படுத்திக் கொள்ளலாமென்று கழகம் சொல்லுகிறது. சாகுபடிப் பரப்பை எவ்வளவு தூரம் அதிகமாக்கிக் கொள்ளலாம். அதனால் அதிகமாக விளையக் கூடியது எவ்வளவென்றேனும், பாசன வசதிகளை எப்படி எவ்வளவு காலத்திற்குள்ளாக அதிமாக்கிக்கொள்ளலாம். அதனால் எவ்வளவு அதிகமாக விளையக் கூடுமென்றேனும், நல்ல விதையாலும் அதிக உரத்தாலும் எவ்வளவுதான் அதிகமாக விளையக்கூடு மென்றேனும், தீவிரமாகச் சாகுபடி செய்வதற்குச் சௌகரியமேனு மிருக்கிறதா? எவ்வளவிருக்கிறது? அதனால் எவ்வளவு அதிகமாக விளையக்கூடுமென்றேனும் இந்தக் கழகம் கவனிக்கவுமில்லை, அறிக்கையில் சொல்லவுமில்லை.

நல்ல விதைகளைப் பொறுக்கிச் சமுசாரிகளுக்குக் கொடுத்து விளைவை அதிகப்படுத்தலாமென்றும் அதற்காக ஒரு திட்டத்தை வகுத்து நடத்திவரவேண்டுமென்றும் சொல்லுகிறது. நெல் குறைவாக விளையும் பொழுதே அதற்கு நல்ல விலையில்லையென்றால், அதிகமாக விளையும் பொழுது நல்ல விலை கிடைத்திடவா செய்யும்? வியாபார மகசூல்கள் சாகுபடி செய்வதால் கிடைக்கும் மிச்சம் உணவுப் பொருள்களினால் கிடையாததினாலேயே நெற்சாகுபடி குறைந்து வருகிற பொழுது, நெல்லுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யும் வரை நெல் விளைவை அதிகப்படுத்த முடியாதே என்பதையும் கழகம் கவனிக்கவில்லை.

காடுகளையும் தரிசு நிலங்களையும் புதிதாகச் சாகுபடி செய்வதற்கும் விபசாயக் குடியிருப்புக்களைப் புதிதாக அமைத்தற்கும் சில யோசனைகள் சொல்லப்படுகின்றன. இவற்றை யனுசரித்து அரசாங்கம் ஏற்படுத்தி வரும் விபசாயக் குடியிருப்புக்களில் ஒரு குடும்பத்துக்கு ஒன்றரை ஏக்கர் நிலத்துக்கு மேல் கொடுக்க முடியாதென்றும் அரசாங்கம் சாதிக்கிறது. புது நிலங்களைச் சாகுபடிக்காகப் பெறுகிறவர்கள் அவற்றைத் தங்கள் சொந்த நிலமாக்கருதக் கூடியதாயிருந்தாலன்றி, விருத்திசெய்யவு மாட்டார்கள். இப்பொழுதிருக்கும் நிலைமையில் அப்படிச் சொந்தம் பாராட்டக் கூடியதாயிருந்தாலுங்கூட விருத்தி செய்வதற்கு வேண்டிய பணம் இனமாகக் கிடைத்தாலன்றி, அவர்களால் விருத்தி செய்துகொள்ளவும் முடியாது. கழகச் சிபார்சின்படி நிலங்களைச் சாகுபடிக்கு இலாயக்காக்கித்தரவும் அரசாங்கத்திற்கு மனமில்லை.

இப்படியாக, கழகத்தின் விபசாய விருத்திச் சிபார்சுகளிலனேகம் திட்டவட்டமாக இல்லாதனவாகவும் பிரயோசனப்பட முடியாதனவாகவுமே இருக்கின்றன. விபசாயிகளின் வறுமை ஒழிவதற்கில்லாதபோது மற்றவர்கள்தான் எப்படிச் செம்மையாக வாழ முடியும்? கிராமவாசிகளின் நிலைமை திருந்

தாத பொழுது அவர்களுடைய திரும்பச் செலுத்தும் சத்தி அதிகமாகாத பொழுது கூட்டுறவுச் சங்கங்களுந்தான் அவர்களுக்கு மென்மேலும் எப்படிக் கடன் கொடுத்து வர முடியும்? பசி வந்து பத்தும் பறந்துபோகும் பொழுது கிராமக்கல்விதான் எப்படி விருத்தியாகும்; சுகாதாரந்தான் எப்படித் திருந்தும்?

(தொடரும்.)

---

6. கல்வி:

ஆரம்பப்பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள்

(சாரம் II)

மொழிப் பாடம் (Language)

வார்த்தைகளே நினைவின் கருவிகளாக இருக்கின்றன. நினைப்பதற்கும் பிறர் நினைவைத் தெரிவதற்கும் பல வார்த்தைகள் தெரிய வேண்டும். ஆகையால், மொழிப்பாடமே ஆரம்பப்பள்ளிப் பாடத்திட்டத்தில் முக்கியமான பாடமாகும். இப்பொழுது ஐந்தாவது வகுப்பு வரையில் படித்தபோதிலும், நிரந்தரமாக எழுதப் படிக்கக்கூடுமென்று சொல்லுவதற்கில்லை; புது முறைப்படி, எழுதப் படிக்க வேணும், நிரந்தரமாகத் தெரியவேண்டும்.

(அ) பேச்சு.

நேராகப் பேசுவதற்கில்லாத பொழுது தான் எழுதவேண்டியது வரும்; ஐந்தாவது வகுப்பு முடியப் படித்து வெளியேறுகிறவன் பின் ஏகதேசமே எழுதவேண்டியது நேரும்; ஆகையால் மொழிப் பிரயோகம் தொண்ணூறு சதமானத்திற்குமேல், பேச்சாகவே யிருக்கும். இப்பொழுது பேசுகிறவர்களைக் கவனித்தால் பேச்சுப் பயிற்சி அவசியமென்பதேற்படும். பேச்சுப் பயிற்சி காதின் மூலமாகவே பெறக் கூடும். ஆகையால், எழுதும் திறமையை விருத்தி செய்வதற்கு முன்னதாகவே வாய்ப் பாடத்தைமுக்கியமாகக் கவனித்திடவேண்டும். இதற்காகப் பாடத்திட்டத்தில் உரையாடல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக, ஆசிரியர் பாடங்கள் பொருள்கள் போன்ற பார்வைத் துணைகளையும் கருவிகளையும் சேகரித்துக் கொள்ளவேண்டும். குழந்தைகள் சாதாரணமாகப் பேசுகிற வார்த்தைகளின் பட்டியையும் தயாரித்துக் கொள்ளவேண்டும். அவற்றில் இன்னின்னது மெதுவாகப் பேசுவன முழுங்கிப் பேசுவன மழுப்பிப் பேசுவன பிரதேசத்தில் மட்டும் பேசுவன சாதாரணமான கொச்சை வார்த்தைகள் தொடர்கள் என்பவற்றை யெல்லாம் குறித்துக் கொள்ள வேண்டும். முதலாவதாக, உரையாடல் பேச்சையும் பின் மற்ற மொழிப் பயிற்சியையும் தரல் வேண்டும். உரையாடற் பயிற்சி வார்த்தைகளைச் சேர்த்து உருப்படுத்துவதோடு, பேச்சின் அளவையும் மாதிரியையும் திட்டமாகவும் விருத்தியாக்கியும் வரவேண்டும். மாணவர்கள் தங்களுடைய பெயர்கள், சகபாடிகளின் பெயர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்களின் பெயர்கள், பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் மேற் பார்ப்பவரின் பெயர்கள், பள்ளிக்கூடத்தின் பெயர், தெருக்கள் இடங்களின் பெயர்கள்உள்படச் சிறப்புப் பெயர்களைத்திட்டமாகவும் தெளிவாகவும் சொல்லுவதும் பேச்சுப் பயிற்சியிலடங்கும். கற்பிக்கப் படாமலே மற்ற மாணவர்கள் தெரிந்து கொண்டிருப்பதை யொட்டி, பட்டினமானால் வீட்டெண்களையும் கிராமமானால் நன்றாகத் தெரியும் அடையாளங்களையும் குறித்து அவற்றைச் சொல்லுவதாக இருக்கவேண்டும். இந்த மாதிரியாகவே முக்கிய நிறங்களின் பெயர்கள்; மங்கல் துலக்கம், இறுக்கம் நெகிழ்ச்சி

திண்மையாகவுள்ளது சிதறுண்டது போன்ற தன்மைகளும்; ஊடுருவுவது சுற்றுக வருவது, உள்ளே வெளியே, மேலே கீழே, முன்னுல் பின்னுல், வலம் இடம் போன்ற நிலைகளும்; வளைந்த நேரான உருவங்களும்; பளபளப் பான கரடு முரடான, மிருதுவான கடினமான கட்டும் (Texture); குறுகிய விசாலமான, மெலிந்த கனத்த, குள்ளமான நீண்ட, சிறிய பெரிய அளவுகளும்; நாணய வகைகளும்; பலம் சேர் வீசை புட்டி உழக்கு போன்ற சரக்குகள் சாதாரணமாக வாங்குகிற அளவு நிறைப் பெயர்களும்; நாளின் பல பாகங்களும்; இன்று நாளை நேற்று போன்ற சொற்களும்; மாணவர்களின் வயது போன்ற காலத்தையும் இடத்தையும் குறிக்கும் கருத்துக்களும் திட்ட மாகச் சொல்லப் பின்னுல் பழக்கலாம். இவை பற்றிய வார்த்தைகள் நிறையத் தெரிவதில், பிசகாகத் தெரிதலுங்கூடாது; கொச்சை வார்த்தையாக இருத்தலுங்கூடாது. புத்தகங் களிலும் அகராதிகளிலும் விரிவுரைகளிலுமே காணக்கூடிய வார்த்தைகளாக இல்லாமல், சாதாரண சனங்கள் பேசும் வார்த்தை களாகவே இருக்கவேண்டும். சிறிய எளிய வாக்கியங்களாக அமைத்துப் பழகினுல் இது சாத்தியமுமாகும். சொன்னுல் விசித்திர மாகத் தெரியும்—ஆனுல், அனுபவத்தில் படித்தவர்கள் அங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்துச் சொல்லுகிற சொற்களைக் காட்டி லும் தெளிவாக அதே கருத்தை விளக்கக் கூடிய சொற்கள் படியாதவர்கள் வாயிலிருந்து வரப்பார்க்கலாம். இதே மாதிரியாகக் கிராமத் தொழிலாளிகள் தங்கள் தொழில் சம்பந் தமாக உபயோகிக்கும் சொற்களும் ஒவ் வொருவருக்கும் தெரிந்திருக்கவேண்டும்.

(ஆ.) வாசிப்பு

வாய்விட்டு வாசிப்பதற்கும் மௌனமாக வாசிப்பதற்கும் வித்தியாசமுண்டு. மௌன மாக வாசித்துப் பழகுவதால், வெகு விரை வாகவும் ஆதலால் அதிகமாகவும் படிக்கமுடி யும்; நன்றுகவும் விளங்கும்; ஆகையால், வாசிப் பின் இன்பமும் அதிகமாகும். (வாய்விட்டு வாசிப்பதால், விளக்கம் குறையவும் நியாய மில்லை; எளிதிலும் மனனமாகும் ப—ர்.)

வாய்விட்டு மெதுவாகவே வாசிக்க முடி யும்; அதனுல் சிரமமும் அதிகமாகும்; களைப் பும் எளிதிலேற்படும். இதனுல், வாய் விட்டு வாசிக்கக் கூடாதென்பதில்லை. வாய் விட்டு வாசிக்கும் பொழுதுதான் குறைகளைக் காண முடியும்; திருத்துவதற்கும் இடமுண்டு. ஆகையால், இரண்டு வகையாகவும் வாசிக்கத் தெரியவேண்டும்; இரண்டு வகைக்கும் தனித் தனிப் பயிற்சியே வேண்டும்.

(இ.) எழுத்து.

குழந்தைகள் ஆறுவயதானவுடனேயே எழுதத் தயாராயிருப்பார்களென்பதில்லை. எழுத்துவேலை புத்தியையொட்டியதல்ல; தசை யும் நரம்பும் சம்பந்தப்பட்டதேயாகும். ஆசிரி யர் குழந்தைக்கு எழுதக்கற்பிக்குமுன், குழந் தை எழுதத் தயாராயிருக்கிறதாவென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படிக்கில்லாத பொழுது அதைக் கட்டாயப்படுத்தினுல், அது பள்ளிக்கூடத்தையும் பள்ளிக்கூடப் படிப் பையும் வெறுக்கச்செய்யும். கைத்தசையும் நரம்பும் திடப்படும்வரை, மற்றக்காரியங்களி லேயே ஈடுபட அவர்களை விட்டுவிடவேண்டும்.

நாமெழுதுவதைப் பிறர் தெரிகிறதற் காக, நாம் எழுதுகிறேம். ஆகையால், நாம் எழுதும் எழுத்து தெளிவாயிருக்கவேண்டும். நாம் விரைவாகவும் எழுதவேண்டும். எழுத் துக்கள் அழகாகவும் இருக்கவேண்டும்; வார்த் தைகளுக்கிடையே இடைவெளியும் இருக்க வேண்டும். வாசிக்கத்தெரியாத எழுத்து பிர யோசனமேயில்லை. விரைவாக எழுதத்தெரி வதும் வாசிக்கத் தெரியும்படி எழுதுவதற்கு அடுத்தபடியேயாகும். அழகாகத்தானிருக்க வேண்டுமென்பது கட்டாயமில்லை; ஆனுல், அப்படியிருப்பது நல்லது. அழகாக எழுது கிறேமென்று அதிகத் தாமசமாக எழுதுவ தும் பிரயோசனமில்லை. முதல் மூன்று வகுப்

புக்களிலேயே நன்ருக எழுதக் கற்றுக்கொடுத்துவிடவேண்டும். விரைவாக எழுத நான்காவது ஐந்தாவது வகுப்புகளில் கற்றுக்கொடுக்கலாம

(ஈ) வியாசம்.

வியாசம் எழுதுவதற்குப் பலவிதத் திறமைகளும் போக்கும் ஒன்றுசேரவேண்டும். முதலாவதாக, சொல்லத்தகுந்த கருத்துக்கள் தோன்றவேண்டும்; அவற்றை எழுத்துப் பிசகு இலக்கணப் பிசகுகளில்லாமல் வாசிக்கக் கூடியதாக வாக்கியங்களாக எழுதத் தெரிய வேண்டும். இவையெல்லாம ஏககாலத்தில் நடக்கவேண்டியனவாகும். முதல் மூன்று வகுப்புக்களில் எழுத்துக்களை வார்த்தைகளை எழுத்துப் பிசகில்லாமல் எழுதுவதும் சிரமப்படும். பலவார்த்தைகள தெரியவுமாட்டா. எழுத்துக்களை விரைவாகச் சேர்த்துக்கொள்ளவும் முடியாது. மூன்ருவது வகுப்பு முடிவு சமயம், சிறு சம்பவத்தை வாய்மொழியாக, சரியாக ஆரம்பித்தும் சரியாக முடித்தும் சொல்லத் தெரியவேண்டும். அதிகமான கருத்துக்களோடு சொல்வதை, நாலாவது அல்லது ஐந்தாவது வகுப்புக்களுக்கு வைத்துக்கொள்ளலாம். முன்யோசனையோடு வியாசம் எழுத முடியாதென்ருல், வாய்மொழியாகச் சொல்லிவிடுவதுதான் நல்லது. நாலாவது வகுப்பில் சமுகச் சிறு கடிதங்களும் ஐந்தாவது வகுப்பில் நீண்ட கடிதங்களும் வியாபாரக் கடிதங்களும் எழுதப்பழகலாம். ஐந்தாவது வகுப்புப் பிற்பாதியில் வியாசம் எழுதவும் தொடங்கலாம்.

(உ) துணைகளும் கருவிகளும்.

படங்களும் படங்கள் நிறைந்த புத்தகங்களும் வார்த்தை சேர்க்கும் எழுத்துக்களும் அவசியம் வேண்டும். படங்களும் அவற்றில் பெயர்களைப் பொருத்துதலும் மொழியைச் சொல்லிவைப்பதற்கு ஆரம்பத்தில்வேண்டியனவாகும். படங்கள் உரையாடலுக்கும் கதை சொல்லுவதற்கும் பேச்சுப் பழக்கத்திற்கும் வார்த்தைச்சீட்டுகளுடன் வாசிப்பதற்கும் உதவும். இவற்றிற்காக அவை சேர்க்கப்படவேண்டும்; தயாரிக்கப்படவேண்டும்; அட்டைகளில் ஒட்டிவைக்கப்படவேண்டும்; இன்னின்னகாரியத்திற்கெனப் பிரித்துவைக்கப்படவும் வேண்டும். உரையாடலுக்காகவேண்டிய படங்கள் பெரிதாக இருக்கவேண்டும். வார்த்தைச் சீட்டுகளை வைப்பதற்கான படங்கள் சிறியனவாக இருக்கலாம். சிறிய படங்களை வார்த்தைச் சீட்டுகளுடன் பெட்டிகளிலாயினும் காகித உறைகளிலாயினும் வைத்திருக்கலாம். பெரிய படங்களில் சிலவற்றை வகுப்புச்சுவர்களிலேயே தொங்கப்போட்டு வைக்கலாம். மற்றவற்றைப் பாகுபாடு செய்து கட்டியும் வைக்கலாம். காகித உறைகளுக்குள் போட்டும் வைக்கலாம். பிரயோசனப்படக்கூடிய சில்லறைப்படங்களைப் பிரிக்கக்கூடுமானல் பிரித்து, படம் பொதிந்துவைக்கும் புத்தகங்களில் வைத்திருக்கலாம். படங்களைத் தெரிதற்கும் பெயர் சொல்லுவதற்கும் உபயோகிக்கலாம்; விவரிப்பதற்கும் உபயோகிக்கலாம்; விளக்குவதற்கும் உபயோகிக்கலாம். பிந்திய இரண்டு வகைகளும் வியாசம் எழுதப் பழகுவதற்கு அடிப்படை போடுவதாகும். இவை போன்று கற்பிப்பதற்குதவக்கூடிய பலவகைச் சீட்டுக்களையும் உபகரணங்களையும் சமயோசிதமாக ஆசிரியர்களே செய்துகொள்ளவும் செய்யலாம்.

(தொடரும்.)

வெண்பா.

சோர்ந்தநிலம் காடுகரை சூழ்நன்செய் புன்செயிவை
எந்தநிலம் உண்டேனினு மென்னுகும்—இந்தக்
கிராமதூ தன்றன்னைக் கீர்த்தியுறப் பார்த்தே
இராம லிருப்பாருக் கீண்டு?

—ஓர் இந்தியவாசி.

வாழையின் குணம்

வாழைத்தண்டை உண்பதால் உவரிப்பை Bladder) சிறு நீர்ப்பிரித்திகளி (Kidneys)ல் வளரும் கல்லும் (Stones) கரையும். வாழைப்பூ குருதியைச் சுத்திகரிக்கும். மேகத்தின் (Gonorrhoea) கொடுமையைத் தணிக்கும்; இந்திரிய நீக்கத்தையும் நிறுத்தும்.

வாழைக் கச்சலைக் கூட்டுக்கறியாகச் சேர்த்து வருவதால், அன்னத்துவேசம் நீங்கும். வயிற்றுக்கடுப்பும் குணமாகும். வாழைக்காயின் நுனி பச்சையாயிருக்கும் வரை, அதனை முற்றியிருப்பதாகச் சொல்லமுடியாது. அப்படி முற்றுதலைப் பச்சையாகத் தின்னவும் முடியாது. அதனைத் தீயில் வாட்டி அல்லது வதக்கித் தின்பதாயிருந்தாலும் எளிதில் செரிக்கும். சீனாவில் அப்படியே தின்கிறார்கள். வங்காளத்திலும் மற்றும் சில இடங்களிலும் அதனைக் குழம்பாக்கியே சேர்க்கிறார்கள். அந்தக் குழம்பு குடற் கோளாறுள்ளவர்களுக்கும் நல்லகுணம் செய்யும். செரிப்புச்சத்தி குறைபவர்களுக்கும் அது நல்ல உணவாகும்.

வாழைப்பழம் முழுவதும் மஞ்சள் நிறம் கொடுத்த பின்னும் அதன் மேல் புள்ளிகள் விழும்வரை காற்றோட்டத்தில் வைத்திருந்து தின்பது நல்லது. அப்படிப் புள்ளிகள் விழுந்துள்ள பழத்திலுள்ள கரிநீரகைச்சத்துப் (Carbohydrate) பழச்சீனியாக (Glucose and sucrose) மாறியிருக்கும். இந்தப் பழச் சீனி எளிதாகச் செரித்து நம் முடற் குருதியோடு சேர்ந்துவிடும். நம் முடலுக்கு அதிகச் சத்தியும் தரும். கடும் உழைப்பில்லாதவர்கள், வேறு மாக்கூர்ப்பொருள்களை உண்பதைக் காட்டிலும் வாழைப்பழத்தைத் தின்பதால், அதிகச் சூட்டை எளிதாகப் பெறுவார்கள். உடல் தேறி வருவதற்காக டி உயிர்ச்சத்தும் பழச் சீனியும் (Glucose) சேர்த்து வருவதற்குப் பதிலாகச் சிறந்த பண்டிதர்கள் வாழைப் பழத்தைத் தின்றுவரச் சொல்லுகின்றனர்.

வாழைப்பழம் வாய்க்கு உருசியாகவுமிருக்கும்; பசியையும் அதிகப்படுத்தும்; இரத்தத்தையும் சுத்திகரிக்கும்; உடல் தேறுவதற்கும் உதவும். போகசத்தியை யிழந்தவர்களுக்குங் கூட, அதனை உணவாகவும் மருந்தாகவும் உட்கொண்டு வரும்படி சொல்லப்படுகிறது.

ஓர் இராத்தல் கோதுமை உரொட்டியால் கிடைக்கும் கனலிச் (Calories) சூடு, நாலு நல்ல வாழைப் பழங்களிலிருந்து கிடைக்கக் கூடும். ஆகையால், அதனை வேனிற்காலத்தில் கட்டி யாகாரத்திற்குப் பதிலாகவும் சேர்த்துக் கொள்ளலாம்; பனிக்காலத்தில் வேறு முக்கிய ஆகாரத்தோடும் சேர்த்துக்கொள்ளலாம்.

வாழைப் பழத்தை நிறை உணவாகக் கொள்ளலாம். அதில் சுகத்தைக் காக்கும் தன்மையும் நிறைந்திருக்கிறது. உடலை வளர்க்கும் தன்மையும் இருக்கிறது. அதன் உயிர்ச் சத்துக்களும் கனியங்களும் மிகவும் பிரயோசனமானவை. அதன் ஏ உயிர்ச்சத்து நம் முடம்பை வியாதி தாக்காமல் காக்கும். அதன் பி உயிர்ச்சத்து செரிப்பதற்குதவும். அதன் சி உயிர்ச்சத்து எலும்பையும் இளையத்தையும் நன்றாக வளர்க்கும். அது ஆரஞ்சு,எலுமிச்சை, ஆப்பிள், தக்காளி முதலிய பழங்களும் பாலும் உதவுகிறமாதிரி சொறி கரப்பான் வராமலுந் தடுக்கும். ஆனால், அந்த சி உயிர்ச்சத்து எப்படித்தான் நம்முடலில் தொழிற்படுகிறதென்று திட்டமாகச் சொல்லுவதற்கில்லை. ஒரு வேளை சி உயிர்ச்சத்துக் குறைவால். நம் முடலின் தீயகிப்புக் (Oxidation) குறைவதாக இருக்கலாம். அஃதில்லாத பொழுது, சில உயிரணுக்கள்

தொழிற்படுவதில்லை யென்றும் எலும்பு, சவ்வு, தந்தம், வெள்ளைநார்த்தசை முதலியன கர்ப்ப கோசத்தில் உண்டாவதில்லை யென்றும் தெளிவாகத் தெரிகிறோம். அதன் குறைவால், சாதாரண இளைய அணுக்களின் வளர்ச்சி தடைபடுவதில்லை யென்றாலும், கருவின் இணைப்பு இளையங்களின் வளர்ச்சி தடைபடவே செய்கிறது; அதை நிறுத்திவைத்திட வேணும் செய்கிறது. இப்படியாக, சி உயிர்ச்சத்தின் குறைவு கருப்பகோசத்தின் பலத்தையே கெடுத்துவிடுகிறது.

வாழைப்பழத்தில் சாம்பர (Potassium) உப்புக்களும் சுதைய (calcium) உப்புக்களும் நிரம்ப இருக்கின்றன. அவை உடம்பை வளர்க்கும் பொருள்களாகும். அதில் காரச் சத்து (alkaline) அதிகமாக இருந்தால், அது உயிரணுப்பரிணமணத் (Cell metabolism) தையும் விளைவிக்கும். இப்படியாக, அதனை எவ்வயதினரும் எந்தக்காலத்திலும் தின்று வரலாம். மற்றும் சாதாரணமாகக் கிடைக்கும் பழங்களைக் காட்டிலும், அது அதிகச் சத்துள்ளது; ஏழைகளுக்கும் மலிவாகக் கிடைக்கக்கூடியது.

Social Welfare

(சித்தவைத்தியத்தின்படி வாழை சமூலம் வாழைப்பூ கச்சல் வாழைக்காய் வாழைப்பழம் இவற்றின் குணங்களைப்பற்றி ஏப்பிரல் மாதம் இதழ் 111ம் பக்கம் பார்க்க. அதே பக்கத்திலும் மறுபக்கத்திலும் அதனைத் தொடர்ந்திருக்கும் குறிப்புகளையும் படிக்க. (ப—ர்.)

ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை சுகாதார வாழ்க்கைக் குறிப்புக்கள்

1. சதுரப்பிரண்டை:

பிரண்டையைநெய் யால்வறுத்துப் பின் பரைத்து [மாதே!
வெருண்டிடா தேற்று விழுங்கில்—அாண்டுவரும்
மூலத் தினவடங்கும் மூலவி ரத்தமறும்
ஞாலத்தி னுள்ளே நவில்.

மாந்தம் வயிற்றுவலி வாயுஅதி சாரழளை [ந்தநடை
சேர்ந்தழ லங்கபம் உட் செப்புனற்போக்—கோய்
யெல்லா மகலும் எழும்பும் அதிக்பசி
மல்லார் பிரண்டையுண்டு வா.

அகத்தியர் குணவாகடம்.

மூலத்தினவு அடங்கும்; இரத்தமூலம் ஒழியும். மாந்தம் வயிற்றுவலி வாதாதிசாரம், முளைமூலம், கபம் இரத்தபேதி சால் அசதி நிவிர்த்தியாகும். பசி உண்டாகும்.

2. களிப்பிரண்டை:

ஐயமறும் பித்தம் அணுகாம லோடிவிடுந்
தையலார் போகமிகச் சாருங்காண்—பையக்
கரப்பான் விலகுங் கடிசிலந்தி யும்போம்
உரப்பாங்க ளிப்பிரண்டை யுண்.

அகத்தியர் குணவாகடம்.

கபம் அகலும்; பித்தம் அணுகாமலோடிவிடும்; வீரிய விருத்தி உண்டாகும்; கரப்பான் கடி சிலந்தியும் நீங்கும்.

3. தீம்பிரண்டை, புளிப்பிரண்டை:

தீம்பிரண்டை தன்றுற் செரியாமந் தம் ஆமந்
தேம்பிரைப்பு விக்கலையந் திண்வாதம்.போம் பலரும்
பார்க்கும் புளிப்பிரண்டை பாண்டுநோய் குன் மகயம்
போக்குமது சூடாம் புகல்.

அகத்தியர் குணவாகடம்.

இனிப்புப் பிரண்டையால், செரியாமந்தம் சீதபேதி கொட்டாவி விக்கல் கபம் வாதம் இவை நீங்கும். புளிப்பிரண்டையால், பாண்டு குன்மம் கயம் இவை விலகும்.

4. வழக்கு:

பிரண்டையின் இளந்தண்டை நெய்விட்டு வதக்கி, அரைத்துத் துவையல் செய்து தின்பது நாட்டு வழக்கு. இதனால் அருசி, வயிற்

றுப்பொருமல் முதலியன போம். தீபனம் உண்டாகும்.

பிரண்டையை நெய்விட்டு வறுத்து அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் 8 நாள் காலை மாலை சாப்பிட்டுவர, ஆசனத்தி னவும் இரத்தமூலமும் ஒழியும்.

இளந்தண்டை இலையுடன் உலர்த்திச் சூர ணித்துச் சுக்குத்தூள் மிளகுத்தூள் சிறிது சேர்த்துச் சாப்பிட வயிற்றுநோய் அசீரணம் நீங்கும். இதையே பாலில் கலந்து சிறிது கற் கண்டு சேர்த்து அருந்த உடலைத் தேற்றி வன் மையைக் கொடுக்கும்.

பிரண்டையைச் சிறு தீயிலிட்டு வதக்கிச் சாறுபிழிந்து காதில் இரண்டொரு துளிவிட, காதுச் சீழ்மாறும். மூக்கில்விட, இரத்த பீந சம் மாறும். இச்சாற்றைத் தகுந்த அளவில் கொடுக்க, சூதகத்தைக் கிரமப்படுத்தும்.

சிறு துண்டுப் பிரண்டையைச் சுண்ணாம்பு நீரில் ஊறவைத்துப் பத்திரப் படுத்தி, வேளைக்கு ஒன்றிரண்டு சாப்பிட, பசியைத் தூண்டும்.

வேரை உலர்த்திச் சூரணித்து $\frac{1}{2}$ வராக னெடை வீதம் கொடுத்துவர முரிந்த எலும் புகள் சீக்கிரம் கூடும். இச்சூரணத்தை வெந் நீரில் குழைத்து மேலுக்குப் பற்றிடலாம்.

(குணபாடம்)

வைத்தியரத்தினம் முருகேச முதலியார்

5. பிரண்டையில் 87·42 சதமானம் ஈரமும் 1·21 சதமானம் பிசிதமும் ·34 சத மானம் கொழுப்பும் 2·01 சதமானம் கனியப் பொருள்களும் 1·83 சதமானம் நாரும் 7·19 சதமானம் கரிநீரகைப் பொருள்களுமிருக்கின் றன. கனியப்பொருள்களில் ·65 சதமானம் சுண்ணாம்பும் ·05 சதமானம் எரியமும் 2·12 சத மானம் கிழாயிரச்சிரெடை இரும்புமிருக்கின் றன. 100 சிரெடைக்கு 36·7 கனலிச்சூடுண் டாகும். உயிர்ச் சத்துக்களில்லை.

Health Bulletin No. 23

6. மண் சட்டி பானைகளில், பால் கெட்டுப் போகாதிருக்கிற மாதிரி, மற்றப் பாத் திரங்களில் கெட்டுப் போகாதிருப்பதில்லை.

விபசாய இலாகா அறிக்கை, 38—93.

7. சாப்பிட்டவுடன் படுத்துக் கொள்ளு வது நல்லதல்ல. சாப்பாட்டிற்கும் தூக்கத் திற்கு மிடையே குறைந்தது இரண்டு இரண் டரை மணி நேரம் இருக்கவேண்டும்.

நல்வழி.

8. நம்முடைய தோலுக்கு அனேக வேலைகள் இருக்கின்றன; அவற்றுள் ஒரு முக் கியமான வேலை வெயர்வையின் மூலம் தேகத் தின் அனற்பதனைச் சரியான நிலையில் வைத்துக் கொள்வதாகும். நம் உள்தோலில் சுமார் இரு பது இலட்ச வெயர்வைப் பைகள் இருக்கின் றன. இந்தப் பைகள் மிகமிகச் சிறியன; பார்க்கக் குழல் மாதிரி இருக்கும். இவை உடம்பு பூராவும் இருக்கிறதென்ற போதிலும், உள்ளங்காலிலும் உள்ளங்கையிலுந்தான் அதிகமாக இருக்கின்றன; உள்ளங்காலைவிட உள்ளங்கையில்தான் சற்று அதிகம். (உள்ளங் காலில் ஒரு சதுர செண்டி மீட்டருக்கு 268 இருக்கின்றனவென்றால் உள்ளங்கையில் 273 இருக்கின்றன.) இந்தப் பைகளைச் சுற்றிலும் நரம்புகளும் இரத்தக் குழாய்களும் இருக்கின் றன; இவற்றினிடத்திலிருந்து தான் வெயர் வைப் பைகளுக்கு நீரும் கழிவுப் பொருள் களும் கிடைக்கின்றன. ஒரு தக்கை வாங் கியைக் (Corkscrew) கொண்டு திருகினால் எப்படி இருக்கும் அந்த மாதிரி திருகிக் கொண்டு வருகின்றன. இந்த வெயர்வைப் பைகள் உட்தோலிலிருந்து மேற்தோலுக்கும் வருகின்றன. மேற்தோலில் துவாரங்கள் மாதிரி தெரிகின்றன அல்லவா? அவை இந்த வெயர்வைப் பைகள்தான். வெயர்வையிலே நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பங்கு நீர்; மீந்த ஒரு பங்கும் பற்பல கழிவுப் பொருள் களாலானது. அதில், எப்பொழுதும் சிறிது உப்பு இருக்கும்; கொஞ்சங் கொஞ்சம் சிறு நீர் உப்பு (Urea) கூடக் கலந்திருக்கும். சிறு

நீரைப்பற்றிய நோய்கள் இருக்கும் பட்சத்தில், வெயர்வையிலே வழக்கத்திலும் அதிகமாகச் சிறுநீர் உப்பிருக்கும். சாராயம் முதலிய மது பான தினுசுகளைக் குடிப்பவர்களுடைய வெயர்வையிலே வெறியை (Alcohol) அல்லது புகையிலை நச்சு (Nicotine) ஓரோர் அளவு காணப்படும்; இயற்கையன்னை அந்த நஞ்சு களின் ஒரு பாகத்தை வெயர்வையின் மூலம் வெளிப்படுத்தத் தேடுவதே இதன் காரணம். நம் மேல்தோலை நாம் எப்பொழுதும் ஈரமாக வைத்துக் கொண்டிருக்கக்கூடாது. அதனால் பருக்களும் கட்டிகளும் புறப்பாடுகளும்கூட உண்டாகலாம். சிலருக்கு உள்ளங்காலில் அபரிமிதமாக வெயர்வை காணும்; கால்விரல் களுக்கிடையே எப்பொழுதும் ஈரமாக இருக் கும். அப்படிப் பட்டவர்கள் தக்க சிகிட்சை செய்து கொள்ளாவிட்டால், வண்ணாரப்புண் (Athlete's foot) போன்ற தோல் வியாதிகள் உண்டாகும். சம்பந்தப்பட்ட பாகத்தைச் சுத்த மாக வைத்திருக்கவேண்டும். சதா வெயர்த்து மிருதுவாகியிருக்கும் பிரதேசத்தில் உடுப்புகள் உராய்வதால், இன்னும் பற்பல கோளாறு களும் வியாதிகளும் உண்டாகலாம். சிலரு டைய கால் வெயர்வை அதிகம் நாறும். அவர்கள் நல்ல தேககசுகமுடையவர்களாக இருக்கலாம்; சுத்தமுடையவர்களாக இருக் கலாம். என்றாலும், அவர்களுடைய உள்ளங் காலில் உண்டாகும் வெயர்வை தாங்க முடி யாத நாற்றமுடையதாக இருக்கும். இதற்கு என்ன காரணமென்று இன்னும் சரியாகக் கண்டறிய முடியவில்லை; சரியான சிகிட்சையும் கிடையாது. இதை நிவர்த்திப்பது சில சமயங் களில் நிரம்பவும் சிரமமாக இருக்கும்.

நல்வழி.

9. மக்காச்சோள ஆமவடை:

மக்காச்சோளம் $\frac{1}{8}$ படி
கடலைப் பருப்பு $\frac{1}{16}$ படி
முந்திரிப் பருப்பு 1 பலம்

பச்சை மிளகாய், உப்பு, இஞ்சி, காயம், பச்சைக் கொத்துமல்லித்தழை, தேங்காய் துரு வல் அரைமூடி.

இவை எல்லாவற்றையும் ஆட்டுரலில் போட்டு ஆட்டி எடுத்துக் கொள்ளவும். ஒரு எலுமிச்சம் பழரசத்தைப் பிழிந்து மாவில் ஊற்றிப் பிசைந்து கொள்ளவும். பின்பு ஆம வடையைச் சுட்டு எடுக்கவும்.

ஆமவடைகளில் வெங்காயம் சேர்த்துக் கொள்ளப் பிரியமுள்ளவர்கள் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு வெங்காயம் சேர்த் தால் அதை மசால் வடை என்றும் சொல்ல லாம்.

(வித்தியாதனம்.) Jane Fenn

---

8. கிராமவாசிகள்: விபசாயிகள்.

பயிரிடுபவரின் வறுமை

CHOWDRY MUKHTAR SINGH

(சாரம் IV)

சனப் பெருக்கம் நம் நாட்டின் வறுமைக்குக் காரண மாகுமா?

நம் நாட்டில், சனத்தொகை பெருகிக் கொண்டேதான் வருகிறது; அதற்காக நாம் என்ன செய்வது? உலகமெல்லாம் அப்படிப் பெருகிவருகிறதே! இருந்தாலும், நம்மவர் களின் தேகம் திடமாக இல்லாதிருக்கவும் நம் மவர்களின் பொருளாதார நிலைமை கேவல மாக இருக்கவும் நமக்குப் பிள்ளைகள் அதிக மாக வேண்டுமா? என்கின்றனர். பிறநாடு களில் சனத்தொகை விருத்தியாகி வருவதைக் காட்டிலும் நம் நாட்டில் அதிகமாக விருத்தி

யாகிவருமென்றால், நம் நாட்டின் வறுமைக்கு அதுவே முக்கிய காரணமாயிருக்கலா மென்று நினைக்கலாம்; அதிகப் பிள்ளைகள் வேண்டா மென்ற முடிவுக்கும் நாம் வரலாம்; ஆனால், உண்மை அப்படியில்லை.

பிள்ளைகள் அதிகமாகப் பிறப்பதற்கு வறுமை தான் காரணம்.

எங்கும் சாதாரணமாக ஏழைகளுக்கே பிள்ளைகள் அதிகமாகப் பிறக்கின்றன; அவர்களுடைய பிள்ளைகள் உண்கப் போதிய உணவில்லாமல் அதிகமாகவும் இறக்கின்றன; என்றாலும், அவர்களுக்கே பிள்ளைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, பிள்ளைகள் அதிகமாக பிறக்காதிருக்க வேண்டுமென்றால், வறுமை யொழிவதே அவசியமென ஏற்படுகிறது.

சீமைச்சனப் பெருக்கத்திற்கும் நம் நாட்டின் பெருக்கம் குறைவே.

(சீமையிலும் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் இல்லாதிருக்கவில்லை. ப—ர்.) 1871-ம் வருடத்தில் சீமையிலும் வேல்சிலும் சேர்ந்து 2 கோடியே 27 இலட்சம் பெயர்களிருந்தனர். ஐம்பது வருடங்களில் இந்தச் சனத்தொகை 66 சதமானம் கூடியிருக்கிறது. 1872-ம் வருடத்தில் நம் நாட்டின் சனத்தொகை 28 கோடியே 61½ இலட்சமாகும். 1921-ம் வருடத்தில் 31 கோடியே 89 இலட்சம் ஆகியிருக்கிறது; அதாவது சீமையில்கூடியதைக் காட்டிலும் 12 சதமானம் குறைவாகவே நம் நாட்டில் கூடியிருக்கிறது. 1872-ம் வருடத்தில் சுதேச இராச்சியங்களின் சனத்தொகை சேர்க்கப்படவில்லை. 1921-ம் வருடத்தில் அது சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்தச் சனத்தொகையைக் கழித்துப்பார்த்தால் 33 சதமானமே அதாவது சீமைக் கூடுதலுக்கும் பெயர்பாதியே கூடியிருக்கக் காண்போம்.

சீமையில் 1891-ம் வருடமுதல் பத்தாண்டில் 12·17 சதமானமும் அடுத்த பத்தாண்டில் 10·91 சதமானமும் அதற்கும் அடுத்த பத்தாண்டில் 4·01 சதமானமும் கூடியிருக்கிறது. நம் நாட்டிலோ முதல் பத்தாண்டில் 2·4 சதமானமும் இரண்டாம் மூன்றும் பத்தாண்டுகளில் 7 சதமானமுமே கூடியிருக்கிறது. (இதற்கும் பிந்திய இருபதாண்டுகளில் நம் நாட்டின் விருத்தியும் அதிகமாக இருக்கக்கூடும். ப—ர்.) இந்த எண்களிலிருந்து, நம் நாட்டின் நிலைமை, சனப்பெருக்கம் சம்பந்தப்பட்ட அளவில் சீமையைப்போல் அவ்வளவு கேவலமாக இருக்கவில்லையென்பது தெரியவரும். சென்ற ஐம்பது வருடங்களில் சீமையிலிருந்து அனேகர் வெளிநாடுகள் போய்க் குடியேறியுமிருக்கின்றனர். அதனையுஞ்சேர்த்துக் கவனித்துப்பார்த்தால், நம் நாட்டின் சனப்பெருக்கம் வெகு குறைவென்றே சொல்லவேண்டும். நம் நாட்டில் போதிய உணவுப் பொருள்களும் விளைகின்றன. (பர்மாவும் நம் நாட்டோடு சேர்ந்திருந்த பொழுது இப்படி எழுதப்பட்டது. ப—ர்.) வெளிநாடுகளுக்கும் கொஞ்சம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சீமைக்கு வெகுவாக உணவுப் பொருள்கள் வெளி நாடுகளிலிருந்தே வந்துசேரவேண்டும். அப்படியிருக்க, சீமையைப் பாதிக்காத வறுமை நம் நாட்டைப் பாதிப்பானேன்? (சீமையின் வறுமை நம் நாட்டின் வறுமையைப்போல் அவ்வளவு கொடுமையாக இருப்பதில்லை. ப—ர்.)

ஒரே குடும்பத்தில் பலரிருப்பது வறுமைக்குக் காரண மாகாது.

ஒரு குடும்பத்தின் பொருளாதார நிலைமை அக்குடும்பத்திலிருக்கும் எண்ணிக்கையை மட்டும் பொருத்ததில்லை; மூன்று பெயர்களேயுள்ள குடும்பம் சௌகரியமாக உண்டு உடுத்திக்களித்து மிச்சமும் சேர்த்து வரலாம். கூலி வேலையே பார்க்கிற குடும்பங்களிலும், நல்ல கூலி கிடைக்குமென்றால், அதிகமான பெயர் இருப்பதால் ஒருவிதமான சங்கடமும் நேராது; பிரயோசனமுமிருக்கும். இதுபோலவேதான், நாட்டிற்கும் நாம் கொள்ளவேண்டும். சீமையிலிருக்கிறவர்களுக்கு வேலை கிடைக்கிறமாதிரி கூலி கிடைக்கிறமாதிரி நம்

நாட்டினும் கிடைக்குமென்றால், நம் நாட்டில் இன்னும் அதிகப் பெயரையுங் காப்பாற்றி வரலாம்; ஆனால், நம் நாட்டு அரசாங்கமோ, நம் நாட்டினருக்கு நல்ல வேலை கிடைக்கும்படி செய்வதும் நல்ல கூலி கிடைக்கும்படி செய்வதும் தன்னுடைய பொருப்பல்லவென்றிருக்கிறது. ஏதேனும் செலவைக் குறைக்கிறதென்று ஆரம்பித்தாலும், சொற்ப சம்பளம் வாங்கி வருபவர்களையே வேண்டாமென்றும் சொல்லி வருகிறது; அவர்கள் சம்பளத்தையே அதிகமாகவும் குறைக்கிறது.

நம் நாட்டின் சனப்பெருக்கமும், பிறநாடுகளின் சனப் பெருக்கமும்.

ஒரு சதுரமைல் பரப்பில் பெல்சியத்தில் 540 பெயரும், சீமையில் 498 பெயரும், உலாந்தில் 361 பெயரும், சீனாவில் 289 பெயரும், இத்தாலியில் 264 பெயரும், சேர்மனியில் 237 பெயரும், நம்நாட்டில் 229 பெயருமிருக்கின்றனர். சப்பானில் நம்நாட்டினும் 60 சதமானம் அதிகமாக இருக்கின்றனர். இருந்தாலும், நம் நாட்டிலிருக்கும் வறுமை சப்பானிலில்லை. கிட்டத்தட்ட சப்பானளவிலிருக்கும் பஞ்சாபின் சனத்தொகையைக் காட்டினும் இரண்டரைமடங்கிருக்கும் சனத்தொகையைச் சப்பான் காப்பாற்றி வருகிறது. பஞ்சாபியரின் பொருளாதார நிலைமையையும் வாழ்க்கைத்திட்டத்தையுங் காட்டினும் சப்பானியரின் பொருளாதார நிலைமையும் வாழ்க்கைத் திட்டமும் உயர்ந்தேயிருக்கிறது.

வெளி நாடு போவது சாத்தியமுமில்லை; அஃது ஒரு பரிகாரமு மாகாது

நம் நாட்டிலிருந்து பிற நாடுகள் போயிருக்கிறவர்களின் வாழ்க்கை நிலைமையைக் கவனித்தால், அஃது அவ்வளவு திருப்திகரமாகவுமில்லை. பிரிட்டிசு சாம்இராச்சியத்தைச் சேர்ந்த நாடுகளினுமே, நம் நாட்டினருக்கு மரியாதையில்லை. எழுதப்படிக்கத் தெரியாதவர் பாடுதான் அப்படியிருக்கிறதென்று சொல்லுவதற்குமில்லை. படித்தவர்களுக்கும் மரியாதைக் குறைவுதானிருக்கிறது. வெளி நாடு படிக்கப் போகும் மாணவர்களுடைய சங்கடங்களையுங் கூட, நம்மால் நிவர்த்திக்க முடியவில்லை. நம் நாட்டிற்கு எந்நாட்டாரும் பிழைக்க வரலாம்; நம் நாட்டினர்க்கோ வேறெந் நாட்டிற்கும் போக்கிலை? அது மட்டுமல்ல, நம் நாட்டிலேயே, நாம், அன்னியர்கள் போலிருக்கிறோம். அப்படியிருக்க, அன்னிய நாட்டினர் நம்மைக் கேவலமாக நினைப்பது நியாயந்தானே!

V

பருவ மழைக் குறைவுதான் நம் நாட்டின் வறுமைக்குக் காரணமா?

மழை காலா காலத்தில் பெய்தால், பயிரிடுகிறவன் பாடு சௌகரியந்தான். காலா காலத்தில் மழை பெய்யத் தவறினால் (குறைந்தால், கூடினால் ப-ர்.) விளைந்த காலத்து மகசூலை வைத்துப் பொழுதைக் கழிக்கவேண்டியதுதானென்கின்றனர். ஒரு வருடம் விளைந்தால் நாலு வருடம் விளையாமல் தீய்ந்து போகிற நிலங்களுமிருக்கின்றன. (விளைந்த வருடத்தில் காணும் மகசூல் அந்த வருடச் செலவிற்குங்கூடக் காணமுடியாது போகலாம். ப-ர்.) அப்படியிருக்க, நாலு வருடங்களைக் கழிப்பதெப்படி? அரசாங்கமே, பயிரிடுபவர்களை வைத்த அரசாங்கம்; அவர்கள் பாடோ! மழையை வைத்த பாடு; அப்படி யிருந்தும் விளையாத வருடங்களினும் நிலவரியும் கொஞ்சமேனும் வசூலிக்கப்படுகிறது. உப்பு வரியென்றும் தபால் தந்திக் கட்டணங்களென்றும் எத்தனையோ வரிகளும் கட்டணங்களும் வசூலிக்கப்படுகின்றன.

வறுமைக்குக் காரணம் முயற்சிக் குறைவே.

பருவ மழைக் குறைகள் எத்தனையோ தலைமுறையாகத்தானிருந்து வருகின்றன. அப்படியிருக்க, அதனையும் பொருட்படுத்தாது பயிரிட்டு வருவதுதான் புத்திசாலித்தனமாகுமேயன்றி, அப்படி யிருக்கிறதேயென்று

சொல்லிக்கொண்டிருப்பது புத்திசாலித்தனமாகாது. இயற்கை விதிகளை யறிந்து; அவற்றிற்கேற்கவே விபசாயம் செய்து வரவேண்டும். களைகள் முளைத்தால் அவற்றைப் பிடுங்கியெறியவேண்டும்; மரத்தின் நிழலில் பயிர்கள் சரியாக வரவில்லையென்றால், மரத்தை வெட்டி அப்புறப்படுத்தவேண்டும்; நிலத்தில் சத்தில்லையென்றால், சாகுபடி செய்யும் பயிருக்கேற்ப, உரமும் இடவேண்டும். பனியை வெய்யிலைத் தவிர்க்க முடியாதென்றாலும், நினைத்த நேரம் மழையைப் பெய்யச்செய்ய முடியாதென்றாலும், தரைக்குக் கீழாகவுள்ள தண்ணீரையேனும் சமையத்திற்குதவும்படி செய்துகொள்ளலாம். அனேக விடங்களில் இன்னும் கிணறுகள் தோண்டிக்கொள்ளலாம். ஆற்றுத் தண்ணீர் பாயக்கூடிய இடங்களுக்கெல்லாம், வேண்டிய இடங்களில் அணை கட்டியும் கால்வாய்களின் வழியாகத் தண்ணீரைக் கொண்டுபோய்ப் பாய்ச்சலாம். நம் நாட்டிலுள்ள ஆறுகளுக்கும் ஓடைகளுக்குமோ கணக்கில்லை. நம் நாட்டின் சராசரி மழையும் 37 அங்குலத்திற்கும் அதிகமாக இருக்கிறது. அது விளைவிற்குப் போதியதுமாகும். ஆனால், மழைத் தண்ணீரில் 35 சதமானத்திற்குமேல், நம்மால் உபயோகப்படுத்தப்படாமல் கடலிற்கே போய்ச் சேருகிறது. (மழைத் தண்ணீரை அந்த நிலங்களே கூடியவரை உறிஞ்சிக்கொள்வதா யிருந்தாலும், அந்த ஈரம் பயிர்களுக்கு வெகுநாள்வரை யுதவும். அப்படியுஞ் செய்து கொள்ளாமல், மழைத் தண்ணீர் நிலங்களையும் அறுத்துப் பிடுங்கி அவற்றிலுள்ள சத்துக்களையும் கரைத்துக்கொண்டு போகும்படி விட்டுவிடுகிறோம். ப—ர்.)

நம் நாட்டில் மின்சார சத்தியை இன்னும் அதிகப்படுத்தலாம். அது சௌக்கியமாகக் கிடைக்கக் கூடுமென்றால், கிணற்றிறைவைச் செலவையும் குறைத்துக்கொள்ளலாம். குழாய்க் கிணறுகளாலும், சில இடங்களில் சௌக்கியமாகச் சாகுபடி செய்துகொள்ள முடியும்.

மரங்களை வெட்டி அழிப்பதால்தான் மழை குறைந்துபோகிறதென்று சொல்லப்படுகிறது; (அஃதுண்மைதான். ப-ர்.) அப்படியிருந்தால், மரங்களை வைத்துண்டுபண்ண ஏற்பாடு செய்யவேண்டாமா? அரசாங்கம் தான் பணம் பெற்ற மரங்களை வெட்டி யழிப்பானேன்? (கூப்பு மரங்களை வெட்டிக் கொள்ளுவதற்காக ஏலம் போடுகிற காலத்தில், பணம் பெற்ற பெரிய மரங்களை வெட்டக் கூடாதென்றுதான் சொல்லப்படுகிறது; அப்படி மரங்களுக்குத் தனி எண்ணும் கொடுக்கப்படுகிறது; என்றாலும், அந்த மரங்கள் வெட்டுப்பட்டுப்போகின்றன. அந்த எண்கள் வேறு மரங்களுக்குப் போய்ச் சேருகின்றன ப-ர்.)

இப்படியாக, மழைக் குறைவின் கேடுகளையும் பயிரிடுபவர்கள் நிவர்த்தித்துக்கொள்ளக்கூடிய பொழுது, அப்படியும் செய்யாதிருப்பதே வறுமைக்கு முக்கிய காரணமாயிருக்கக் கூடுமேயன்றி, மழைக் குறைவொன்றே வறுமைக்குக் காரணமாகிவிடாது. (தொடரும்.)

---

9. கதை: சரித்திரம்

கூறுகெட்ட குப்பான்

VII

மூன்று சகோதரர்களையும் கெடுத்து விட்டு வருவதாகப் போன குறளிகளிடமிருந்து செய்தி வரும் வருமென்று குட்டிச் சாத்தான் காத்துப் பார்த்தது; ஆனால், ஒரு செய்தியும் வரவில்லை. தானே போய் விசாரித்து வரலாமென்று புறப்பட்டது. எங்கும் தேடித்தேடிப் பார்த்தது. குறளிகளைக் காண முடியவில்லை. மூன்று துவாரங்கள்தான்

தென்பட்டன, "நான் சொல்லி யனுப்பிய வேலையைச் செய்ய முடியாமல் தவறி யிருக்க வேண்டும்; போனாலென்ன; நானே ஒரு கை பார்த்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு சகோதரர்களைத் தேடிப் போயிற்று. அவர்கள் பழைய இடங்களிலில்லை. மூன்று பெயரும் வெவ்வேறு இராச்சியங்களை ஆண்டு கொண்டிருந்தனர். இஃது அதற்கு இன்னும் அதிகமாகக் கோபம் மூட்டிற்று. "நல்லது, இதில்தான் நம் திறமையைப் பார்க்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டு, முதலாவதாக, கலிப்பகையைத் தேடிப் போயிற்று. அங்கே தன் சொந்த சொரூபத்தில் போகவில்லை. ஒரு தளகர்த்தனாக வேடம் போட்டுக் கொண்டு போய்ச் சேர்ந்தது.

"நீ ஒரு பெரிய போர் வீரனென்று தெரிந்தேன்; எனக்கும் அந்தத் தொழிலில் தேர்ச்சியுண்டு; உன்னிடம் ஊழியம் பார்க்கலாமென்று வந்திருக்கின்றேன்." என்று கலிப்பகையிடம் குட்டிச் சாத்தான் சொல்லிற்று. கலிப்பகை பல கேள்விகளைக் கேட்டான்; அவற்றிற்குச் சொன்ன புத்திசாலித்தனமான பதிலைக்கேட்டு அந்தக் குட்டிச் சாத்தானை வேலைக்கமர்த்திக் கொண்டான்.

புதுத் தளகர்த்தர் கலிப்பகைக்கு பலமான படை சேர்க்க யோசனை சொன்னார். வாலிபர்களை யெல்லாம் படையில் சேர்க்க வேண்டும்; வேலையில்லா திருப்பவர்களுக்கும் வேலை கொடுத்தது போலாகும். நம் பட்டாளமும் முன்னிலும் ஐந்து மடங்கு பெரிய பட்டாளமாகிவிடும். புதிய துப்பாக்கிகளும் பீரங்கிகளும் செய்ய வேண்டும்; ஒரே மூச்சில் நூறு குண்டுகள் சுடக்கூடிய துப்பாக்கி செய்ய எனக்குத் தெரியும்; அப்படித் துப்பாக்கிதான் செய்தாக வேண்டும். அவற்றைக் கொண்டு சுடும்பொழுது, பயறுகள் போல குண்டுகள் எங்கும் பறக்கும். மனிதனையோ, குதிரையையோ, சுவரையுங்கூட எரித்து ஒன்றுமில்லையென்னும்படி செய்திடக் கூடிய பீரங்கிகள் செய்யவும் எனக்குத் தெரியும். அவை எதையும் சுட்டுப் பொசுக்கி விடும்.

கலிப்பகை புதுத்தளகர்த்தர் யோசனையையெல்லாம் கேட்டான்; வாலிபர்களை யெல்லாம் பட்டாளத்தில் சேர்த்தான்; துப்பாக்கிகளும் பீரங்கிகளும் செய்யத் தொழிற்சாலைகளமைத்தான். அடுத்த தேசத்தரசனோடு அவசரம் அவசரமாகச் சண்டையைத் தொடக்கினான். துப்பாக்கிகள் குண்டுகளைச் சரமாரியாகப் பொழிந்தன. பீரங்கிகள் தீயாகக் கக்கின. அந்த எதிரியின் சேனை ஒரேயடியில் பேர்பாதிக்குமேல் எரிந்தும் சாம்பலாகவும் போயிற்று. அந்த எதிரி திடுக்கிட்டுப் போனான்; தன்னை விட்டால் போதுமென்று இராச்சியத்தையே கலிப்பகையிடம் ஒப்புவித்து விட்டு ஓடிப்போய் விட்டான். கலிப்பகையின் மகிழ்ச்சிக்கு அளவே யில்லை.

இனி அடுத்த நாட்டரசனையும் சண்டைக் கிழுக்க வேண்டியதுதான்; அந்த நாட்டையும் கைப்பற்ற வேண்டியதுதான் என்ற உற்சாகத்தோடு அடுத்த நாட்டோடும் சண்டையைத் தொடக்கினான். அந்த அரசன் இதற்கிடையில் இவனுடைய கெட்டிக்காரத்தனத்தை யெல்லாம் தெரிந்து கொண்டான். தனியாக வாழ்ந்து வந்த பெண்களையும் அவன் பட்டாளத்தில் சேர்த்தான்; அவனுடைய பட்டாளம் இவனுடையதைக் காட்டிலும் பெரிதாகி விட்டது. இவனுடைய ஆயுதங்கள் மாதிரியே துப்பாக்கிகளும் பீரங்கிகளும் தயாரித்துக் கொண்டான். இருவருடைய பட்டாளமும் சண்டைக்குத் தயாராகவும், கலிப்பகையின் பட்டாளத்தின் மீது வெடிகுண்டுகள் வந்து விழுந்தன. உடனே அவன் பட்டாளம் ஓட ஆரம்பித்தது. அம்மட்டில் கலிப்பகையும் தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று ஓடிப்போய் விட்டான்.

குட்டிச்சாத்தான் பிறகு பேய்ச்சிமுத்தைத் தேடிப் போயிற்று. அங்கே ஒரு வியாபாரியாகப் போய்ச் சேர்ந்தது. வியாபாரம் செய்ய ஆரம்பித்தது. எந்தச் சாமான் கிரயத்திற்கு வந்தாலும் பெறுமான கிரயத்திற்கு மேல்கொடுத்து வாங்கியது. நாடெங்கும் பணம்

தாராளமாயிற்று. தீர்வையும் எளிதாக வசூலாகிற்று. பேய்ச்சிமுத்தும் அளவிலா ஆனந்தமடைந்தான். புது வியாபாரி நம் நாட்டிற்கு வந்ததும் போதும்; நமக்கு நல்லகாலம் பிறந்துவிட்டது. நம்மிடம் நிரம்பப் பணம் வந்து சேரும். நமக்கு இனி ஒரு குறைவுமில்லை என்று வந்தவர்களிடமெல்லாம் சொல்லுவான். புதிதாக ஒரு பெரிய அரண்மனை கட்டத்தீர்மானித்தான். அதற்காக, "சனங்களெல்லாம் மரமும் கல்லும் கொண்டுவந்து கொடுக்க வேண்டும்; வேலைக்கும் வரவேண்டும்" என்று பறை சாற்றினன். வேலைக்கு நல்ல கூலியும் மரத்திற்கும் கல்லுக்கும் நல்ல விலையும் தருவதாகச் சொன்னன். ஆனல், எவரும் வேலைக்கு வருவாரில்லை; கல்லும் மரமும் வந்துசேர்ந்தபாடுமில்லை. என்ன வென்று விசாரிக்கிற பொழுது வியாபாரி நல்ல விலை தருகிருன்; நல்ல கூலியும் தருகிருன்; அங்கேயே வேலைக்கும் போய்விடுகிருர்கள்; சாமான்களும் போய்ச் சேருகிறதென்று தெரிந்தான். பேய்ச்சிமுத்தும் கூலியையும் விலையையும் உயர்த்திப் பார்த்தான்; வியாபாரியும் அவற்றிற்குப் போட்டி போட்டு உயர்த்தினன். பேய்ச்சிமுத்துவின், அரண்மனைக் கட்டடம் உயரவில்லை; அரைகுறையாக நின்றுபோய்விட்டது.

பேய்ச்சிமுத்து ஒரு தோட்டம் போட நினைத்தான்; ஆட்களையெல்லாம் வேலைக்குக் கூப்பிட்டான்; வியாபாரி குளம் வெட்ட ஆட்களைக் கூப்பிட்டான்; வியாபாரியிடம் வேலை பார்க்கத்தான் ஆட்கள் போனுர்கள்; பேய்ச்சிமுத்தின் எண்ணம் ஒன்றும் பலிக்கவில்லை; ஆனல் தீர்வைப் பணம் மட்டும் சரியாக வசூலாகி வந்தது. வசூலான பணத்தை வைக்க இடமில்லை, சங்கடமாகவே இருந்தது. ஒரு கவலையும் வேண்டாம், சும்மா யிருப்போமென்றிருந்தான்; அப்படியும் சும்மாயிருக்க முடியவில்லை. முதலாவது குதிரைக்காரன் விலகினன்; பிறகு சமையற்காரனும் போய்விட்டான்; சாப்பாட்டிற்கும் வழியில்லை. ஏதாவது வாங்கிச் சாப்பிடலாமென்றாலும்; எல்லாம் புது வியாபாரியிடம் போய்ச் சேர்ந்துவிட்டது; அவன் விலைக்குக் கொடுப்பதாயில்லை. பேய்ச்சிமுத்துக்குக் கோபம் பொறுக்கமுடியாமல் அந்தப் புது வியாபாரியைத் தன் நாட்டை விட்டே விரட்டி விட்டான். அவன் இந்த நாட்டின் பக்கமாகவே அடுத்த நாட்டிலிருந்து கொண்டான். அங்கிருந்துகொண்டும் இந்த மாதிரியே செய்து வந்தான். ஆக, பேய்ச்சிமுத்து தன்னிடம் நிரம்பப் பணம் இருந்தும் உண்பதற்கொன்றுமில்லாமல் தவித்துக்கொண்டிருந்தான். இது சமையம் அவன் உதவியை நாடிக் கலிப்பகையும் வந்து சேர்ந்தான். என்ன செய்வான்? உண்கச்சோறுமில்லையே; நான் என்ன உதவி செய்ய முடியுமென்று சொல்ல, இருவரும் தங்கள் சங்கடங்களைச் சொல்லியும் அழுதும் தேற்றிக் கொண்டார்கள். குட்டிச் சாத்தான் அவனை விட்டும் புறப்பட்டுவிட்டது.

(தொடரும்.)

---

10. குடிசைத் தொழில்: கைத்தொழில்

பொருளாதார விருத்திக்கான சௌகரியங்களைப் பற்றிய குறிப்பு

L. B. Green, Director of Industries and Commerce, Madras.

(சாரம் II)

செய்பொருள் வியாபாரம்

நூல் மாத்திரமல்ல, துணியும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாவது குறைந்துவிட்டது. சருக்கரை தீபெட்டி சிமெண்டு இவற்றின் இறக்குமதியும் அவ்வாறே குறைந்து வருகிறது. கைத்தொழிலிலாகா

வின் அபிவிருத்தியால், சவர்க்காரமும் வெளி நாடுகளிலிருந்து வருவது குறைந்து விட்டது. பைக்காரா மின்சார சத்தி வந்ததிலிருந்து கோயம்புத்தூர் பிரதேசத்தில் பருத்தியாலைத் தொழில் வெகுவாக விருத்தியாகி யிருக்கிறது. நம் மாகாணத்தின் பிறபாகங்களில் அது அவ்வளவாக விருத்தியாக வில்லை யென்றாலும் முன்னிலும் அதிகமாகியே வருகிறது. மேட்டூரில் துணி நெய்யவும் வெண்மையாக்கவும் ஒரு ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆலையை யொட்டி கைத்தறி நெசவு குடியிருப்பொன்றும் அமைக்கப்படும். கைத்தறி நெசவாளிகளால் நெய்யப்படும் துணிகளும் அங்கே சாயம் ஏற்றப்படும்.

நம் மாகாணத்தில் சிமெண்டு வருடத்திற்கு இலட்சத்து இருபதினாயிரம் தன்வரை செய்யப்படுகிறது. வெளி நாட்டிலிருந்து வரும் சிமெண்டு பதினாயிரம் தன்னாகக் குறைந்து விட்டது. பெசுவாடா திரிசிராப்பள்ளி, மங்களகிரி இவற்றிலேற்படுத்தப் போகும் தொழிற்சாலைகளிலிருந்து இலட்சத்து ஐம்பதினாயிரம் தன் செய்யக்கூடும். இப்படியாக, இன்னும் இரண்டொரு வருடத்தில் மூன்று இலட்சம் தன் சிமெண்டு செய்தாகும். தற்சமையம் இலட்சத்து எழுபத்தையாயிரம் தன் சிமெண்டுக்குத்தான் செலவிருந்து வருகிறது. அதிகமாகச் செய்யப்படுவது சௌக்கியமாக விற்கப்படுமென்றால், சுண்ணாம்புக்குப் பதிலாகவே நல்ல கட்டடங்களுக்கெல்லாம் சிமெண்டை உபயோகிப்பதாக முடியும். கட்டடப் பொருள்களாகச் செங்கல்களை உபயோகிப்பதோடு இயந்திரங்களால் செய்யப்படும் சிமெண்டு கட்டடப் பகுதி (Blocks) களையும் சேர்த்துக் கட்டுவதாக முடியும். காங்கிரேட் வேலைகளுக்கும் பாதைகளுக்குமே அதனை அதிகமாக உபயோகப்படுத்தலாம். சீமையில் சிமெண்டு செய்யக்கூடிய அளவிற்கும், நாற்பது ஐம்பது சதமானம் குறைத்தே செய்யப்படுகிறது.

பர்மா தவிர்த்த பிற நாடுகளிலிருந்து தீப்பெட்டி இறக்குமதியாகிக்கொண்டிருந்ததும் நின்றுவிட்டது. நம் மாகாணத்தில் செய்யப்படுவதும் இரங்கூனிலிருந்து வருவதும் சேர்ந்து நம் மாகாணத்தில் செலவாக முடியவில்லை. ஆகையால், இரங்கூனிலிருந்து வருவதை நிறுத்தினால் அல்லது குறைத்தாலன்றி நம் மாகாணத்தில் தீப்பெட்டி அதிகமாகச் செய்வதற்கு இடமில்லை.

சென்ற சில வருடங்களாக நம் மாகாணத்தில் சவர்க்காரம் செய்தல் நிரம்பவும் விருத்தியாகியிருக்கிறது. இருபது வருடங்களுக்கு முன் நம் மாகாணம் பூராவிலும் ஒரே ஒரு சவர்க்காரத் தொழிற்சாலைதான் இருந்தது. இப்பொழுது வெளி நாட்டிலிருந்து நாலு இலட்சத்து அறுபத்தோராயிர ரூபா பெறுமான சவர்க்காரமே வந்துகொண்டிருக்கிறது. சில விசேடத்தர சவர்க்காரம் தவிர்த்து மற்ற வற்றின் வரத்தெல்லாம் இன்னும் கொஞ்சகாலத்தில் நின்று போகக்கூடும்.

1938-39ம் வருடத்தில் நம் மாகாணத்தில் திடீரென்று கரும்பாலைகள் அதிகமாயின. இறக்குமதியும் வெகுவாகக் குறைந்தது. என்றாலும், நம் மாகாணத்தின் சருக்கரைத் தேவையில் மூன்றிலொரு பங்கே நம் மாகாணத்தில் செய்யப்படுகிறது; மற்ற இரண்டு பங்கும் வட இந்தியாவிலிருந்தே நாம் பெற வேண்டியதிருக்கிறது.

மேட்டூரில் காரத்தொழிலும் (Alkaline Industry) உவரக் காரமும் (Caustic Soda) பாசிகக்கரயமும் (Liquid chlorine) சலவைத் தூளும் (Bleaching powder) நீரகமும் (Hydrogen) மற்றும் இரசாயனப் பொருள்களும் செய்ய ஒரு இரசாயனக் கைத்தொழிற் சங்கம் (Mettur Chemical and Industrial Corporation Ltd.,) அமைக்கப்படுகிறது. அந்தச் சங்கம் ஆரம்பத்தில் நாளொன்றுக்கு ஐந்து தன் உவரக்காரமும் நாலரைத்தன் பாசிகமும் செய்வதில் முனைந்து நிற்கும். பாசிகத்தில் ஒன்றரைத் தன்னை கரயமாகச் செய்யும். சலவைத் தூளும் மூன்று தன் செய்யும். கொஞ்சகாலத்திற்குப் பின் உப்பிலும் சுதை

யத்திலுமிருந்து (Calcium) உவரக் கரிகை (Sodium Carbonate) செய்ய ஆரம்பிக்கலாம்.

கீழக்கரையில் பளபளப்பான களிமண் குழாய்கள் (Stoneware pipes) செய்வதற்காக இரண்டு குயத்தொழிற் சாலைகள் அமைக்கப்படுகின்றன. மூன்றாவது தொழிற்சாலையும் குண்டூர் சில்லாவில் அமைக்கப்படும். இராச மகேந்திரபுரத்தில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலையில் தளவரிசைச் செங்கல்களும் பீங்கான் பாண்டங்களும் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். சென்ற சுமார் பத்துவருடங்களுக்குள்ளாகப் பன்னிரண்டரை இலட்ச ரூபா பெறுமானதோடு நீக்கிய முந்திரிப்பருப்பு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாக விருத்தியாகியிருக்கிறது. குண்டூரில், புகையிலை உலர்த்தவும் பக்குவப்படுத்தவும் செய்யப்படுகிறது. சென்னையில், பிசுக்கோத்துகளும் மருந்துச் சரக்குகளும் கண்ணாடிச் சாமான்களும் செய்யப்படுகின்றன. கள்ளிக்கோட்டையில் மடிப்புப் பலகைகளும் (Dlywood) சோரனூரில் வெட்டாயுதங்களும் கர்நூல் சில்லா மார்க்கபுரத்தில் கற்பலகைகளும் கும்பகோணத்தில் நூற்சரிகையும் செய்யப்படுகின்றன. மசூலி பட்டினத்தில் சாத்திரிகக்கருவிகளும் (Scientific Instruments) இராசமகேந்திரபுரத்தில் ஊற்றுமைப் பேனாக்களும் (Fountain Pens) செய்யப்படுகின்றன. பெசுவாடாவில் மாம்பழங்களையும் மற்றும் பழங்களையும் முறப்பா செய்யவும் தகரப் போணிகளில் அடைத்து விற்கவும் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்.)

---

11. செய்தித் திரட்டு:

அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்.

1. பெண்கள் பிள்ளைகள் அதிகமாக வேலை பார்க்கும் மதுரை சேலம் கோயம்புத்தூர் வட்டங்களைச் சேர்ந்த 12 சில்லாக்களிலும் வருடம் பூராவும் வேலை செய்யும் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு வர, ஓர் உதவிப் பெண் பார்வையாளரின் நியமுகம் உத்தரவிடப்பட்டிருக்கிறது. பெண்கள் பிள்ளைகளை வேலை வாங்குவதைப்பற்றிய தொழிற்சாலைச் சட்டம், பிள்ளைகளை வேலை வாங்குஞ் சட்டம், பெண்களுக்கு பேறுகாலத்திற்குச் செய்ய வேண்டிய உதவி பற்றிய காரியங்கள் இவையெல்லாம் அவளே கவனித்து வருவாள்.

Press Note No- 59.

2. பர்மா அரிசி விலையாகும் எல்லாத் தேசங்களிலும் வியாபார அதிகாரிகளை நியமிக்கவேண்டுமென்றும், பர்மாவிலிருந்து ஏற்றுமதியாகும் அரிசி முழுவதையும் சர்க்கார் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், பர்மா அரசாங்க சபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. சர்க்கார் காரகர்கள் (Agents) மூலமாகவே வெளி நாடுகளுக்கு அரிசியை விற்க வேண்டுமென்றும், சர்க்கார் அனுமதிச் சீட்டில்லாமல், சர்க்கார் காரகர்கள் இல்லாத தேசங்களுக்கு அரிசியை ஏற்றுமதி செய்ய ஒருவரும் அனுமதிக்கப்படக்கூடாதென்றும், வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக, சர்க்கார் கொடுமுறைப் (Tender) பிரகாரம் உள்ளூரில் அரிசியை வாங்கவேண்டுமென்றும், நெல் அரிசிகளின் விலைவாசிகளைச் சர்க்காரே நிர்ணயிக்க வேண்டுமென்றும் இத்தீர்மானம் வரையறுக்கிறது.

வர்த்தக ஊழியன்.

3. இத்தாலியிலிருந்து எகிப்திற்குப் பருத்தித்துணிகள் ஏற்றுமதியாகிக்கொண்டிருந்தது நின்றுவிட்டது. எகிப்திலேயே துணி நெசவு வெகுவாக விருத்தியாகி வருகிறதென்றாலும்,

பிறநாடுகளின் போட்டியுமிருக்குமென்றாலும், நம்மிந்தியத் துணிகளுக்கும் இடமில்லாமல் போகாது.

வர்த்தக ஊழியன்

(சென்ற வருடம் சப்பானிலிருந்து போய்க்கொண்டிருந்த துணிகளும் இனிப்போ கக்கூடியதில்லை. ப—ர்)

ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள்

1. தஞ்சாவூர் சில்லாவில், ஆறு குறிப்பிட்ட குளங்களில், கௌரமி கட்லா மீன்கள் வளர்க்கப்படும். இந்த வேலையையும் இதன் விளைவையும் சென்னைக் கைத்தொழில் வியாபார இலாகாத் தலைவரின்கீழ் வேலை செய்யும் மீன் பிரிவு சங்கங்களுக்குக் காட்டிவரும்.

Press Note No. 59.

2. கையால் காகிதம் செய்வதைக் கிராமங்களில் செய்துகாட்டி வருவதற்கு இரண்டு கூட்டங்களை அமைக்கவும், இரண்டு கூட்டங்களின் வேலைகளையும் இணைத்து வருவதோடு அவற்றை மேற்பாத்து வரவும் சென்னைத் தோல் வியாபாரக் கல்விச் சாலையில் கையால் காகிதஞ் செய்வதைப் பற்றி ஆராய்ச்சி செய்து வரவும் ஒரு மேற்பார்வையாளரை நியமிக்கவும் அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. ஒரு கூட்டம் கடப்பை அல்லது அனந்தப்பூர் சில்லாவிலும், இன்னொரு கூட்டம் சேலம் திரிசிராப்பள்ளி அல்லது மதுரைச் சில்லாவிலும் வேலை செய்யும்.

Press Note No. 59.

3. தோலை உரிக்கவும் நவீன முறைப்படி குடிசைத் தொழிலாக அதனைச் செப்பனிடவும் பாதுகாக்கவும் ஊரூராகப் போய்ச் செய்துகாட்டி வருவதற்கு ஒரு கூட்டத்தை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. அது சாதாரணமாக ஒவ்வொரு ஊரிலும் ஆறு மாதத்திற்குக் குறையாமல் தங்கும். சென்னைத் தோல் வியாபாரக் கல்விச்சாலையின் வேலையைப் பற்றியும் அதன் ஆராய்ச்சிகள் வியாபாரிகளுக்குப் பயன் படக்கூடியதைப் பற்றியும் விளம்பரஞ் செய்தும் வரும். அது தங்குங் கிராமங்களில் தோல் பதனிடும் வேலை படிப்பதற்கு வருடத்திற்கு 12 மாணவர்கள் எடுத்துக்கொள்ளப் படுவர். அவர்களுக்கு மாதம் ரூ 5 உதவித் தொகையும் கொடுத்துவரப்படும்.

Press Note No. 59.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. (1) எட்டாம் வகுப்பு சர்க்கார் பரிட்சை (1) தாய்மொழி (2) கணிதம், (3) பூகோளம், சரித்திரம், தேசபரிபாலனம் இவற்றில் நடக்கும். 1942-ம் ஞு ஏப்ரல் மாதம், முதற் பரிட்சை நடந்தேறும்.

(2) இந்தப் பரிட்சையைநடத்துவதற்குப் பரிட்சை அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்; அவர்கள் பரிட்சை நடத்துவதைப் பற்றியும் பரிட்சையில் தேறினவர்களுக்கு யோக்கியதா பத்திரம் அளித்தல் முதலியன பற்றியும் விதிகளை ஒழுங்கு செய்து அரசாங்கத்துக்கு அறிவிப்பார்கள்.

(3) இந்தப் பரிட்சைக்குச் செல்லும் ஒவ்வொரு மாணவனும் பரிட்சைக்குப் பிரவேசக் கட்டணம் ரூ 1—8—0 கட்டவேண்டும். இந்த ஏப்பிரல் மாதத்திற்குப் பிறகு 8-ம் வகுப்பு E. S. L. C. சர்டிபிக்கெட் கொடுக்கப்படமாட்டாது.

இதுவரை 8ம் வகுப்புப் பரிட்சையை ஆங்காங்குள்ள பதிவிப் பார்வையாளர்களும், (Deputy Inspectors) கீழ் உதவிப் பெண் பார்வையாளர்களும் நடத்திவந்தது எல்லாருக்கும் தெரிந்த காரியம். அந்தப்படி நடத்தப்பட்ட பரிட்சையானது ஒரே மாதிரியாக

இருக்கக்கூடியதில்லை. அது அவ்வளவு திருப்தி அளிக்கக்கூடிய முறையுமல்ல. ஆகவே, ஆரம்பக்கல்வியின் விருத்தியும் அவ்வளவு சிலாக்கியமாயிராது. ஆனால், புதுமுறைப்படி பரிட்சை நடப்பதால், ஆரம்பக்கல்வி விருத்தியும், எங்கும் ஒரே மாதிரியான முறையும் ஏற்படுவதற்கு அனுகூலமாய் இருக்கும்.

இந்தப் பரிட்சையின் முக்கிய நோக்கம் பிள்ளைகள் ஒரு சாதாரணக் கல்வி அறிவும் ஜீவியத்திற்குப் போதுமான அளவு காரியங்களை நடத்தும் சத்தியும் பெற்றுக்கொள்ள ஒரு சாதகமாய் இருப்பதேயாகும். இப்பரிட்சை அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதற்கும் உயர்தரப் பள்ளியில் 4-ம் பாரத்தில் சேர்ந்து அங்கிலம் படிக்கப் பயிற்சி அளிப்பதற்கும் ஏற்ற ஒரு பரிட்சையாகாது.

இந்தப் பரிட்சைக்கு வேண்டிய பாடப் புத்தகங்களைச் சென்னை அரசாங்கமே தன் அச்சுக்கூடத்தில் அச்சடித்துப் பிரசுரிக்கும். இதுகாலம் வரை, பற்பல புத்தகக் கம்பெனியார் பிரசுரம் செய்தது இனிமேல் நின்றுவிடும்; அவர்கள் பிரசுரிக்கமாட்டார்கள்.

சிறுவர் அறிவுக்கதிர்.

2. தொழிலிலாகா ஆதரவிற்குரிய இந்து மாணவர்களுக்கு மத்தியானச் சாப்பாடு இனுமாகக் கொடுக்கப்படுமிடங்களில், அதே வகுப்புக்களைச் சேர்ந்த ஆனால் கிறித்தவர்களாக இருக்கும் மாணவர்களுக்கும் அந்தச் சலுகைகாட்டிவரப்படும்.

Press Note No 59.

3. சிந்து மாகாணச் சிறையிலிருப்பவர்களில், 40 வயதுக்குக் கீழ்ப்பட்டிருந்து மூன்று அல்லது அதிக வருடத் தண்டனையும் அடைந்திருப்பவர்கள் விரும்பினால் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளலாம். ஞாயிற்றுக்கிழமையும் சிறை விடுமுறை நாட்களும் தவிர்த்து மற்ற நாட்களில், நித்தம் ஒவ்வொரு மணி நேரம் கௌரவ ஆசிரியர்களாலும் சிறையாசிரியர்களாலும் (Prison teachers) சொல்லிவைக்கப்படுவார்கள். அவர்கள் தேறும் ஒவ்வொரு வகுப்புக்கும் 10 நாட்கள் வீதம் தண்டனையில் கழித்துக்கொள்ளப்படும்.

The Social Welfare.

4. எந்தக் கூட்டுறவுச் சங்கமும் தான் வேலை நடத்திவரும் கட்டடத்தை யேனும் அதனொருபாகத்தையேனும் தன் வேலை அல்லது கூட்டுறவுக் காரியங்களுக்காக வன்றி வேறெதற்காகவும் உபயோகப்படுத்தவுங் கூடாது; பிறர் உபயோகப்படுத்துவதற்கு இடந்தரவுங் கூடாது.

G. O. Mis. No 74 Development.

5. இனி இராசமகேந்திரபுரம், தஞ்சாவூர், கோயம்புத்தூர் இவ்வூர்களில் தொடர்ந்தும் அனந்தப்பூரில் ஒவ்வொரு வருடம் விட்டும் நிரந்தரமான கூட்டுறவுப் பள்ளிகள் (Co-operative Institute) நடைபெறும். அவற்றில் அந்தந்தப் பிரதேசப் பதிவிப் பதிவாளரும் (Deputy Registrar) தம் அதிகார நிலைமையில் அங்கத்தினராக இருப்பார். பாடத்திட்டமும் (Syllabus) மேல் விசாரணைக் காரர் (Superintendant) விரிவுரைக் காரர்கள் (Lecturers) போதகாசிரியர்கள் (Instructoros) நியமுகமும் பதிவாளர் (Registrar) அங்கீகாரம் பெறவேண்டும். அனுபவப் பயிற்சி (Practical training) சேர்த்து ஒன்பது மாதம் படிப்பிக்க வேண்டும். கூட்டுறவு இலாகாப் பரிசோதகர்கள் (Inspectors) மேற்பார்வையாளர்கள் (Supervisors) கிராமச் சங்க நிருவாகிகள் முதலியோருக்கும் மறுபயிற்சி (Refresher Courses) தரலாம். புத்தக சாலை வாசக சாலையும் பள்ளியுடன் சேர்த்து நடத்தி வர வேண்டும. 1941 ஜூலை மாதம் முதல் வாரம், முதல் வகுப்புத் தொடங்கும். உயர்தரப் பள்ளி முடிவுப் பரிட்சை யாதாரச் சீட்டுப் பெற்றுள்ளவர்களில் நாற்பது பெயருக்குக் குறையாமல் படிப்பதற்காகத் தெரிந்தெடுக்கப் படுவார்கள். அவர்கள் பூராப் படிப்பிற்கும் ரூ 40 சம்பளம் செலுத்த வேண்டும். G. O. No 615 D.dd 26-3-41

R. C. No 216/14—D. dd. 3-4-41.

6. கூட்டுறவு நகர பாங்குகள் தங்கள் சேம நிதியை அதன் காற் பங்கிற்கு மேற் போகாமல், மத்திய நில அடமான பாங்குப் பத்திரங்களில் போட்டு வைக்கலாமென, தன் 14-2-41உ ய 288ம் எண்ணில், நம் மாகாண அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

இனி நகர பாங்குகள் சம்பாதிக்கும் சேம நிதியின் பாகங்களை, அந்தத்தாரணைக்கு மேற் போகாதபடி, அந்தப் பத்திரங்களிற் போட்டு வரலாமெனப் பதிவாளர்களும் உதவிப் பதிவாளர்களும் தங்கள் தனிக்கைக் கட்டளையில் அனுமதித்திடலாம்.

R. C. 9906/39 B. dd. 13—3—41

12. அறிவுரைத் திரட்டு:

அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்

1. இங்கிலாந்தில், ஒரு ஏக்கரில் 2000 இராத்தல் தானியம் விளைகிறது; நம் நாட்டிலோ 690 இராத்தலே விளைகிறது. சாவகத்தில் (Java) ஒரு ஏக்கரில் 40 டன் கரும்புண்டாகிறது; நம் நாட்டிலோ 10 டன் கரும்புதான் உண்டாகிறது. நம் நாட்டில் ஒரு ஏக்கரில் பருத்தி 98 இராத்தல் வெடிக்கிறது; அமெரிக்காவில் 200 இராத்தலும் எகிப்தில் 450 இராத்தலும் வெடிக்கிறது.

Rural India.

2. விபசாய வேலைகளுக்குத் திடமான திறமையுள்ள வேலையாட்கள் அவசியமென்றால் அவர்களுடைய கூலியும் கொஞ்சங்கொஞ்சமாக வேனும்போதியதாகக் கூடிவரவேண்டும்.

British Agriculture.

3. விபசாய விளைபொருள்களின் விலை உலக மெங்கும் துடும்துடுமென்று ஏறவும் இறங்கவுமாக இருக்கின்றன. அது தன் சமுசாரிகளைப் பாதிக்காதபடி பாதுகாப்பதே, அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.

British Agriculture.

4. நெல்லுக்கு வேண்டிய தண்ணீர்த் தேவையைக் கோயம்புத்தூரில் பரிட்சித்துப் பார்த்ததில், நடுகைக்குப்பின் ஒரு மாதம் வரை 2 அங்குலத்தண்ணீர் கட்டிவரவேண்டுமென்றும் அதன்பின், 12 நாளைக்கொருதடவை 4 அங்குலத்தண்ணீர் கட்டி வந்தால் போதுமென்றும் காணப்பட்டது.

Report on the operations of Agriculture

5. சோயாப்பயறு 40 அங்குல மழைக்குக்குறையாதுபெய்யும் கோதாவரி காவிரி தீரவாசங்களில் கனத்தவண்டல் நிலங்களில்தான் நன்றாக உண்டாகிறது. கோயம்புத்தூரில் இறைவைத்தோட்டங்களிலும் நன்றாக உண்டாயிற்று. வானவாரியாக விதைத்ததில் பலன் தரவில்லை. குண்டூரில் கொஞ்சம் பரவாயில்லை. ஆடுதுறையில் ஒயாப்பெருமழையினால், சரியாக உண்டாகவில்லை. மருதேரில் ஒரு தினுசு (Behrum) ஏக்கருக்கு 1140 இராத்தலும் இன்னொரு தினுசு (Benygpe) 1100 இராத்தலும் விளைந்தன.

Report on the operations of Agriculture.

6. ஆமணக்கம் பிண்ணாக்கு நிலக்கடலைப் பிண்ணாக்கு நவச்சியக்கந்தகை முதலியவற்றுள்ளும் தக்கைப்பூண்டு கொழுஞ்சி அகத்தி முதலியவற்றுள்ளும் உள்ள உயிர்ச்சத்தின் ஏற்றத்தாழ்வைப் பரிட்சித்துப் பார்க்கப்பட்டது. இவற்றின் காலக அளவுதான் குறியேயன்றி, வேறில்லை. அது ஒரே யளவாய் அமையும் போது, எந்த உரமும் ஒரே விதப் பலன் தரும் உரமாக முடிகிறது. கிரயத்தையும் எளிதாய்க் கிடைக்கக்கூடியதையும் அனுசரித்து, இவற்றில் எதையும் உபயோகிக்கலாம்.

முதலில் குழைபோட்டுப்பின் நடும்போது மேல் எரிகை (Super Phosphate) போட்டதினால், நடுகைக்குப்பின்னால் மேல் எரிகை போடுவதிலும் அதிக மேனிகண்டது. ஏக்கருக்கு 30 இராத்தல் காலகம் அமையக்கூடிய அளவிற்குப் பிண்ணாக்குப் போட்டதிலும் முதலில் 4000 இராத்தல் குழை போட்டுப் பின் பூப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன் 15 இராத்தல் காலகம் அமையக்கூடிய நவச்சியக் கந்தகை போட்டதிலும் அப்படி உரம் போடாத நிலத்தைக்காட்டிலும் 25 முதல் 50 சதமானம் அதிக மேனி கண்டது. என்றாலும், இப்பொழுதிருக்கிற விலைவாசியில் பிண்ணாக்கும் நவச்சியக் கந்தகையும் போட்டுக்கொள்ள முடியாது. குழை யொன்றுதான் போட முடியும்.

Report on the operations of Agriculture.

7. சாகுபடி செய்யப்படும் நிலத்திற்கு உரங்கள் போடுவதின் மூலமோ அல்லது ஒரு பசுந்தாள் பயிரைப் பயிரிட்டு அதை அந்நிலத்தில் மடக்கி உழுதுவிடுவதின் மூலமோ நிலத்திற்குக் கரிமப்பொருள் சேரக்கூடும். அவ்விதம் பச்சைத்தழைகள் போடுவதினால், சாகுபடியால் குறையும் சத்தும் சேரும். மக்கு (Humus) உண்டாக்கக்கூடிய பொருளும் மண்ணில் சேர்ந்து மண்ணும் வளம்பெறும். நாம் மடக்கியுழும் பசுந்தாள் பயிரானது ஒரு கோதுப்பயிராக (Legume) இருக்குமாயின், பூமியிலுள்ள காலகச் சத்துடன் அப்பயிர் ஆகாயத்திலிருந்து கிரகிக்கும் காலகமும் (Nitrogen) அந்நிலத்தில் சேரும். தொழுஎரு மண்ணிற்குக் கரிமப் பொருள்களையும்

தாவரங்களுக்கு வேண்டிய காலகம் (Nitrogen) எரியம் (Phosphorus) சாம்பரம் (Potassium) போன்ற உணவுப்பொருள்களையும் கொடுக்கும்; அணுக்கிருமிகளாகிய நுண்ணங்களின் தொகையையும் விருத்தி செய்யும்.

மண்ணில் கரிமப் பொருள்கள் (organic manure) சேருவதால், மண்ணின் வயணத்திலும் மாறுதலுண்டாகிறது. கெட்டியான களிமண் பூமிகளில் அவை சேரவும், தரை இளகி நல்ல வடிகால் வசதி உண்டாகிக் காற்றோட்டமும் உண்டாகிறது. மணல் பூமிகளில், தனித்தனியே உள்ள மணலைப் பிறவற்றோடு பிணைத்துச் சத்துள்ள மண்ணாகச் செய்கிறது. அதனால், ஈரம்காக்கும் சத்தியும் அதிகப்படுகிறது. மழை குறைவான ஜில்லாக்களில் அத்தியாவசியமான தண்ணீரைச் சேர்த்துவைத்துக்கொள்ளும் சத்தியையும் அது பெருக்குகிறது. பொதுவாக, அது மண் தூளாகும் சத்தியை அதிகப்படுத்தி, தண்ணீர் வடியும் சத்தியையும், வேர்கள் சுலபமாகப் பரவுவதற்கான வசதியையும் நுண்ணங்களையும் விருத்தி செய்கிறது.

கனடா விபசாய இலாகா பத்திரிகைக் குறிப்பு.

8. ஒரு செண்டு நாற்றங்கால்: நாற்றங்காலை உழுத பிறகு பரம்புச்சட்டத்தைக் கொண்டு மட்டப்படுத்தி 8 அடி அகலமும் 54 அடி நீளமும் உள்ள பாத்திகளாகப் பிடித்து அவற்றைச் சுற்றிவர $1\frac{1}{2}$ அடி அகலமுள்ள வாய்க்கால்களும் பிடிக்கப்பட்டன. இப்படியாகப்பிடிக்கப்பட்ட பாத்திகள் திரும்பக் கைமட்டத்தாலும் மட்டப்படுத்தப்பட்டன. பிறகு சிலமணிநேரம் ஒரு அங்குலத் தண்ணீர் அவற்றில் நிற்கும்படியாகத் தண்ணீர் விடப்பட்டது. அதன் பிறகு முளைகிளம்பிய விதைகளைச் சம்பா பாத்திக்கு ஒரு படியாகவும் குறுவை ஒன்றரைப் படியாகவும் ஊடு குறுவை இரண்டு படியாகவும் பாத்தியைச் சுற்றிவந்து கொண்டே இரண்டு மூன்று சுற்றில் விதைக்கப்பட்டன. அப்படி விதைத்ததில், விதைகள் நன்முக முளைத்து நாறுகள் ஒன்றுபோல் வளர்ந்தன. சாதாரணமாக நாறுகளுக்காக விதைப்பதில் பாத்திக்குள் கால் தடங்கள் பதிகிற மாதிரி, பதியவுமில்லை. குறுவைநாறு நாலங்குல இடை வெளிவிட்டும் சம்பா நாறு 4, 5 அங்குல இடைவெளி விட்டும் ஒற்றை நாறுகளாக நடப்பட்டன. குறுவை சாதாரண விளைவிற்கும் 10 சதமானம் அதிகமாகவும் விளைந்தது! விதையிலும் 50 சதமானம் மிஞ்சிற்று.

(The Madras Agricultural Journal)
M. J. David.

9. 1929ம் வருடமுதல் நாளிதுவரை, 1936–1937 ம் வருடத்தில் சில மாதங்களும் சண்டை ஆரம்பமுதல் நான்கு மாதங்களும் விலை சூடாக இருந்ததைத் தவிர்த்து, விபசாய விளைபொருள்களின் விலை மந்தமாகவேயிருந்து வருகிறது. சண்டைக்கு முன்னதாகவும் கூட நம் நாட்டின் விளைபொருள்கள் பிறநாட்டு விளைபொருள்களோடு போட்டி போடக்கூடியதாயிருக்கவில்லை. இப்பொழுது சண்டையின் காரணமாக, நம் நாட்டு விளை பொருள்கள் எந்த வெளி நாட்டுக்கும் போகக்கூடியதாக இல்லை. நம் நாட்டிலேயே அவை செலவாக வேண்டும். இதற்கு மத்தியில், அரசாங்கம் பிறநாடுகளோடு ஒப்பந்தத்தின்மூலமாகச் செல வழிக்கமுடியுமா வென்பதையும் கவனிக்க வேண்டும். உலகமெங்குமே ஆலை முதலாளிகளின் நிலைமை மாதிரியாகப் பயிரிடுபவரின் நிலைமையில்லை. அதுவும், நம் நாட்டு உழவர்கள் கொஞ்சமும் சங்கடம் தாங்கக்கூடியதில்லை. பயிரிடுபவரின் சம்பாத்தியத்திறமை கீழே இறங்காதபடி அரசாங்கம் காத்துவரவேண்டும். இதற்காக, நிலங்களை விருத்தி செய்யவும் கடன் பளுவைக்குறைக்கவும் உபதொழில்களை உண்டு பண்ணவும் விளைபொருள்கள் செய்பொருள்களுக்கு நல்லவிலை கிடைக்கச்செய்யவும் வேண்டும். விளைந்து வரும் காலத்தில் இன்னின்ன மகசூலை இன்னின்ன விலையாக விற்க வேண்டுமென்று அரசாங்கம் குறிப்பிடவும் வேண்டும். அந்தப்படி வாங்கிக்கட்டவும் தயாராயிருக்கவேண்டும். (அரசாங்கம்வாங்கிக் கட்டத் தயாராயிருக்குமென்றால், அப்படிச் செய்யவேண்டிய அவசரமில்லாமலே விலைகள் விழாதிருக்கும்; ஏறியும் போகும். ப-ர்.) விலைவாசிகளுக்குத்தக்கதான தீர்வை வசூலிப்பதற்கான ஏற்பாடு அரசாங்கம் அவசியம் செய்ய வேண்டும். நல்ல விலை விற்கிறகாலத்தில் செலுத்துகிற தீர்வையே விலையில்லாத பொழுதும் செலுத்துவ தென்பது, சிரமமும்கூட; நியாயமுமில்லை. வெளிநாட்டு விலை ஏற்றடி யிறக்கடியை நாம் தடுக்க முடியாதென்றாலும், அவற்றிற்கேற்ப நம்முடைய பொருளாதார முறையையேனும் அவசியம் ஒழுங்கு படுத்தித்

தீரவேண்டும். விலைவாசிகள் விழுந்து வருகிற காலத்தில், அந்த மந்தம் சனங்களை அதிகமாகப் பாதிக்காதபடி கட்டட வேலைகள் நடத்தவும் பாதைகள் இருப்புப்பாதைகள் போடவும் கால்வாய்கள் முதலியன வெட்டவும் இவற்றைப் புதுப்பிக்கவும் வேண்டும். எகிப்து தென் ஆப்பிரிக்கா நியூசிலந்து முதலிய தேசங்களின் விளைபொருள்களைப் பிரிட்டன் வாங்குகிற மாதிரி, அதற்காகவேனும் தனக்காகவேனும் நம் அரசாங்கம் நம் விளைபொருள்களை வாங்கவேண்டும். உதவித் தொகை கொடுத்தேனும் நம் நாட்டில் விலையாக முடியாத (செய் பொருள்களாகவும் செய்து விற்க முடியாத ப-ர்) விளைபொருள்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி அங்கே விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். (Indian Economic Conference)

S. G. Beri.

ஆ. கிராமப் புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள்

1. பூமாதேவி ஒரு இலட்சுமி. பூமியை நாம் கெடுகாளாக மறந்துவிட்டோம். படித்தவர்கள் விபசாயத்தை இழிவான தொழில் என்று கருதுகிறார்கள். இந்த மடமை ஒழியவேண்டும். ஒரு பயனுமற்ற மேல்நாட்டுப் படிப்பைப் படித்துவிட்டு முப்பது ரூபா நாற்பது ரூபாவுக்கு அடிமைப்பட்டு வாழும் மதிகெட்ட முறையை ஒழிக்கவேண்டும். "பூமி திருத்தி உண், சிரைத்தேடின் ஏரைத்தேடு" என்ற ஔவை வாக்கைப் போற்றி எல்லோரும் பூமியின் மீது நாட்டம் செலுத்தவேண்டும். நாட்டில் உள்ள கல்வியறிவுள்ள இளைஞர்கள் நரகங்கள் எனத்தகும் நகரங்களிலே அடைபட்டு அடிமைப்பட்டுக் கிடப்பதை ஒழித்து விடுதலை பெற்ற வீரர்களாய் நாட்டுப் புறங்களை நாடி, விபசாயம், தோட்டப் பயிர் முதலிய சுதந்திரத் தொழில்களில் ஈடுபட்டுச் சுதந்திரமான சுகவாழ்க்கை, இயற்கை வாழ்வு நடத்த முற்படவேண்டும்.

பசிவந்திடில் பத்தும் பறந்துபோம். நாட்டிலே அன்பும், அறமும், கல்வியும் புலமையும், சீரும் சிறப்பும் திகழவேண்டுமானால் சோற்றுப் பஞ்சம் ஒழியவேண்டும். சோறின்றி வீரம் இல்லை, கல்வி இல்லை, கலையில்லை, அன்பில்லை, ஆண்மையில்லை. மக்கள் தங்களுக்குரிய உயர்ந்த குணங்களையெல்லாம் கொண்டு சிறந்தோங்கவேண்டுமென்றால், நாட்டிலே வறுமை ஒழிய வேண்டும்; சிறுமைகள் நீங்க வேண்டும். அனைத்திற்கும் முதலாவதாகச் சோற்றுப் பஞ்சம் நீங்கவேண்டும். அதற்கு அன்னபூரணியின் திருவருள் வாய்த்தல் வேண்டும். பூமாதேவி மீது நாம் நாட்டம் செலுத்துவோமானால், நமக்குச் செல்வங்கள் பொங்கும்.

நாட்டிலே சோற்றுப் பஞ்சத்தை ஒழிப்பதன் மூலமாக ஏனைய பஞ்சங்களையும் நோய்களையும் ஒழித்து, அறியாமை அநியாயம் முதலிய கேடுகளிலிருந்து மக்களை விடுதலை செய்யத் தரும வீரர்கள் பலர் நாட்டிலே தோன்ற வேண்டும்.

கிராம இந்தியா.

2. தொழில்களுள் எல்லாஞ் சிறந்தது உழுது பயிர்செய்து வாழும் உழவுத்தொழிலே. பயிர்த்தொழில்தான் நமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை உண்டாக்கிக் கொடுப்பது. உணவின்றி உயிர் வாழுதல் முடியாது. பயிர்த்தொழில் செய்யும் உழவர்களே உலகத்தை வாழச் செய்கின்றனர். அவர்கள் தங்களுடைய முயற்சியால் தாங்களும் உணவைப் பெறுகின்றனர்; உலகத்துக்கும் உணவையளிக்கின்றனர். இன்னும் அவர்கள் பிறருடைய ஏவலுக்கு அடங்கினவர்கள் அல்லர். தாங்கள் விரும்பியபடி தங்களுடைய தொழிலைச் செய்பவர்கள். அத்தொழிலில் நின்றும் அவர்களை ஒருவரும் நீக்கிவிடுதல் முடியாது. அவர்கள் தாங்களே தங்களுக்கு எசமானர்களாய் இருப்பவர்கள். இந்த இரண்டு காரணங்களால் தான், பயிர்த்தொழில் மற்றெல்லாத் தொழிலினுஞ் சிறந்தது என்று சொல்லப்படுகிறது. உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை, கண்டீர்; பழுதுண்டு வேறோர் பணிக்கு.

சதாசிவ ஐயர்.

3. கிராமப் புனருத்தாரணமெல்லாம் முக்கியமாக வயிற்றுக்குச் சோறு தேடும் வேலையேயாகும். பயிரிடுபவர்களுக்கும் அவர்களுடைய கூலிவேலைக்காரர்களுக்கும் உணவிற்கு வேண்டிய அளவு மிச்சமும் கூலியும் கிடைக்கவேண்டும். நல்ல அமைப்பின் (orga-

nisation) பலத்தாலும், சரியான யோசனை சொல்லி வருவதாலும், அரசாங்கத்தின் அனுதாபத்தோடு கூடிய உதவியாலும் கிராமவாசியின் தற்போதைய வரவை அதிகப்படுத்திவிடலாம். உணவுச்சங்கடத்தை நிவர்த்தி செய்வதற்குதவுகிறதைப்போல, வேறு எவ்வித சமூக ஊழிய வேலையையும் பட்டினியாய்க் கிடக்கும் கிராம வாசிகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை.

கிராம முன்னேற்ற வேலைகள் எத்துணைதான் சிரமமாக இருப்பினும், இன்றைக்கில்லையென்றாலும் என்றைக்கேனும் திறமையான பொதுத்தாபனங்களால் செய்து தீரவேண்டும். அப்படித் தாபனங்கள் அரசியல் கட்சி சம்பந்தமில்லாதனவாகவும் இருத்தல்வேண்டும். அதற்கெனத் தனித்ததீவிரமான தலைவரும் வேண்டும். சரியான தொண்டர்களும் வேண்டும்.

அரசியல் துறைகளில் தடபுடலாகப் பேசித் திரியும் வெளிச்சத்தை விரும்பும் தொண்டர்கள் சந்தடியின்றி ஆக்க வேலைகள் செய்வதற்கு அத்துணை பொருத்தமாக இருக்கமாட்டார்கள். ஆகையால், வேறு தொண்டர்களை ஆத்திரத்துடன் சரியாக வேலைசெய்யக் கூடியவர்களாகவும் பழக்கித் தீரவேண்டும்; அதற்குச் சௌகரியமாக இப்பொழுதே எல்லா இளைஞர்களையும் புதிதாகச்செய்யும் வேலைகளிலும் மற்றும் ஆக்கவேலைகளிலும் பழக்கி வரவேண்டும்.

G. K. Puranik.

4. இப்பொழுது முக்கியமாகக் கிராமவாசிகளின் நினைப்பும் போக்கும் மாறவேண்டும். இடைவிடாது தீவிரமாகச் செய்யும் பிரசாரத்தால்தான் அவை மாறக்கூடும்.

Chitnis.

5. நாம் பயிரிடுபவரின் பொருளாதார நிலைமையைப் பலவகையிலும் விருத்திசெய்தாலன்றி இப்பொழுது கிடைக்கிறதைக் காட்டிலும் அதிக வரவு அவருக்குக் கிடைக்கும்படியாகச் செய்தாலன்றி, அவருடைய முழு நேரத்தையும் பிரயோசனகரமாகச்செலவழிப்பதற்கு உதவினாலன்றி, அவருடைய விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும்படிசெய்தாலன்றி, அவரை அதிகம் படித்தவராகவும் அதிகப் புத்திசாலியாகவும் செய்தாலன்றி, இவ்வளவு காரியங்களையும் செய்துவந்தாலன்றி, அவருடைய பொருளாதார நிலைமை விருத்தியாகக்கூடியதில்லை. வாங்கின கடனை அவரைக் கொடுக்க வேண்டாமென்று சொல்லுவதினாலும், வேறு சட்டங்கள் செய்வதினாலும், இன்றைக்கு மிச்சம் தராத உழவுத்தொழில் நாளைக்கே மிச்சம் தரும் தொழிலாக மாறிவிடாது.

Bombay Chronicle. A. B. Lathe

இ. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனா முறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

1. கார்லைல் என்ற அங்கில ஆசிரியர் அங்கிலத்தின் தலைசிறந்த கவிஞரான செகப்பிரியர் என்பவரைப்பற்றிக் கூறுங்கால், அங்கிலேயன் ஒருவன் "உனக்கு இந்தியா வேண்டுமா, அன்றிச் செகப்பிரியர் வேண்டுமா? என்று வினவினால், அவன் "இந்தியாவை இழப்பினும் இழப்பேன், செகப்பிரியர் நம்உயிர்நாடி போன்றவர், அவரை இழக்க ஒருப்படேன்" எனப் பதிலிறுப்பான் என்று கூறி, செகப்பிரியரையும், அவரால் அங்கிலமொழி அடைந்த உயர்வையும் பசுமரத்தாணிபோன்று கேட்போர் உள்ளத்துப் பதியவைத்தார். ஆயின், அங்கிலம் செகப்பிரியருக்கு எத்துணை கடப்பாடுடையதோ அதனைவிடப் பன்மடங்கு தமிழ், வள்ளுவருக்குக் கடப்பாடுடையதாம். என்னை? "எல்லாப் பொருளும் இதன் பாலுள; இதன்பால் இல்லாத எப்பொருளுமில்லையால்" என்று அக்காலத்திலிருந்த ஒரு பெரும் புலவர் கூறியாங்கு, மக்களாகிய நாம் அறியவேண்டுவனவெல்லாம் இத் திருக்குறள் நூலின் கண் உள. தமிழணங்கு தலையெடுத்து அவளுடைய புதல்வர்களாகிய நமக்கு இன்முகம் காட்டி நிற்பது, தமிழ் நாடு செய்த தவப்பயனாய் மனத்துக்கண் மாசிலராகிக் குணமென்னும் குன்றேறி நின்ற திருவள்ளுவர் அவதரித்ததினாலன்றோ? அவராலன்றோ, நாமும் பண்டைக் காலத்தே மிகச் சிறப்புப்பெற்று வாழ்ந்த சமுதாயத்தைச் சார்ந்தவரென எண்ணிடப்பெற்று வருவதற்கேற்ற பெருமையைப் பெற்றோம்? மேலும், அவர் தம் நூலில் யாவருக்கும் ஒப்ப முடிந்த பொருட் சிறப்பும் இலக்கிய இலக்கண வனப்புமமைந்து கிடத்தலினால், வள்ளுவர் காலத்திலேயே அது பிரமாண நூலாகத் தொடங்கிவிட்டது. மலைவு வருமிடங்கடோ

றும் 'இது வள்ளுவன் மொழி, யென்றால் அவ் வளவில் மலைவு நீங்கிவிடும். கண்ணுதல் கவியினுங் குற்றங்கற்பித்த நக்கீரரே தமது இறையனாரகப்பொருளுரையிலே குறளைப் பிரமாணமாக எடுத்தாண்டு போயினரென்றால், மற்றோர் கொள்வது புதுமையாமோ? மணிமேகலை பாடப்பட்ட காலத்திலேயே திருக்குறள் உலகில் பலராலும் ஒப்பத்தக்கதோர் உறுதி நூலாய் விளங்கியதன்றோ? இவ்வகையில் எல்லாருக்கும் பொது நூலேயாகித் தமிழருக்குச் சிறப்பு நூலாய திருக்குறளை நாளடைவில் தமிழர் புறக்கணிக்கலாயினர். ஐயகோ! இன்று உலகிலுள்ள மற்றெம்மொழிப் புலவர்களாலும் போற்றற்குரிய தெய்வப் புலமைவாய்ந்த செம்புலச் செல்வர் ஒருவர் நந்தமிழ் மொழியியினுண்டு என்பதையும் அவர் அருளிய அருமருந்தாய நூல் திருக்குறள் என்பதையும் அறியாத தமிழ் மாக்கள் எத்துணை எத்துணை பேர்? ஏழை யொருவனுக்கு இறைவன் ஒரு பொற் புதையலை யளிக்க, அப்புதையலை எடுத்துக்கொள்ளாது அவ்வேழை மகன் தாண்டிச் செல்லுவானாயின் அவனது பேதமையை என்னென்று கூறுவது? அருமணிப் புதையலன்ன திருக்குறள் நூல் ஒன்று கிடைத்திருக்க, அதனைத் தமிழர் கொள்ளாது ஒதுக்கின், அவர்கள் அறிவுடைமையை என்னென்பது? யாவருக்கும் பொதுமறையாயும், ஒழுக்க நூலாயும் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத செம்பொருளாயும் உள்ள திருக்குறளை ஒவ்வொரு தமிழ்மகனும் போற்றிப் படித்துச் செந்நெறி கண்டு இனிது வாழவேண்டும் என்று, தமிழன் தமிழ்ப் புலவோர் மாட்டுத் தன் அன்பைப் பெருக்கி அவர் தம் நூற்களைக் கற்றுணர ஆர்வம் அடைகின்றானோ, அன்றுதான் தமிழன் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்கட்கும் ஆக்கந்தேடுபவனாவான். அன்றே "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச், சான்றோன் எனக்கேட்டதாய்", எனப் பொய்யா மொழி முழங்குமாறு தமிழணங்கு நம்மிடையில் அகங்களிப்ப, முகமலர்ச்சி எய்தத்திருநடம் புரிவாள்.

எனில், பல்வகைகளிற் சிதறுண்டு கிடக்கும் தமிழ்மக்களை ஒரு முகப்படுத்தத் தமிழறிந்தார் செய்யவேண்டுவனயாவை? ஒவ்வொரு தமிழனுக்கும் திருக்குறள் மேல் ஆர்வம் உண்டாகுமாறு தமிழறிந்தோர்செய்தல் வேண்டும். அந்நூலில் பொதிந்துள்ள பல்வேறு உண்மைகளை மக்கள் அறியுமாறு ஆங்காங்கு மாலைப் பள்ளிக்கூடங்க ளமைத்து மொழிப் பயிற்சி கொடுத்தல் வேண்டும். ஒவ்வொரு தந்தையும் தாயும் தம் குழந்தைகட்குக் குறட்பாக்களைச் சொல்லி வைத்துக் கேட்டு மகிழ்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் சில புதிய குறட்பாக்களையாவது பொருளறிந்து படித்த பின்னரே உண்ணல் வேண்டும். தமிழன் திருக்குறளோடு உறவாடலும் வீடு வாசலில் திருக்குறளின் மணம் வீசுமாறு செய்தலும் தன் கடமைகளாகக் கொண்டொழுகல் வேண்டும். ஆங்காங்குத் திருவள்ளுவர் கழகங்கள் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் நிறுவி வாரந்தோறும் திருக்குறளைப் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தல் வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் தமிழ் நூல் நிலயம் பொது மக்களுக்குப் பயன்படுமாறு ஒன்றாவது ஏற்படுத்தல் வேண்டும். நம்மிந்திய மொழிகளில் எந்தெந்த மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப் படாதிருக்கிறதோ, அந்த மொழிகளிலும் அதனை மொழி பெயர்க்கச் செய்தல் வேண்டும். மேலும் கிறித்தவப் பாதிரிமார் விவிலிய நூலை நாடெங்கும் பரவச் செய்தவாறு, காண்போர் கண்ணும் மனமும் கவரப்படுமாறு திருக்குறளை மிக அழகாக அச்சிட்டு மக்கட்கு அடக்க விலையினும் குறைந்த விலைக்கு வழங்க வேண்டும். திருக்குறளைப் பயந்த திருவள்ளுவரின் திருநாளை ஆண்டு தோறும் தமிழ் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடச் செய்தல் வேண்டும். திருக்குறளை ஒவ்வொரு மாணவனும் 5-வது வகுப்பிலிருந்தாவது கட்டாயமாகக் கற்பிக்கச் சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கச் செய்தல் வேண்டும். சென்னை மாநிலத்திலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் மொழியில் முதன்மையாகத் தேர்வு பெறும் மாணவர்களுக்குத் தக்க பரிசுகள் வழங்கி, அவர்கள் மென்மேலும் தமிழாராய்ச்சியில் ஈடுபடுமாறு ஊக்கல் வேண்டும். எத்திறத்தாருக்கும் பொதுவாகப் பயன்படுமாறு சென்னை நகரத்தில் திருவள்ளுவர் பெயரால் ஒரு மாளிகை அமைத்து (புதிதாக ஒரு கோவில் காண வேண்டாம், மயிலாப்பூரிலிருக்கும் திருவள்ளுவர் கோவிலைச் செம்மைப் படுத்தி, பக்கத்தில் ஒரு புத்தக நிலயம் நிறுவினால் போதும். ப-ர்) அவர் உருவச் சிலையொன்றை யதன் கண் நிறுத்தி, இற்றைநாள் வரை எழுதப்பட்ட திருக்குறள் உரை, ஆராய்ச்சிக் கட்டுரை, மொழி பெயர்ப்பு,

பதிப்பு முதலியவற்றை ஒருங்கே சேமித்துப் பலர்க்கும் பயன்பட வைத்தல் வேண்டும். யாவற்றுக்கும் மேலாகத் திருக்குறள் நூலில் உள்ள ஒழுக்கக் குறள்களைப் பொறுக்கி யெடுத்து ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரும் ஓதி ஒழுக்க நெறிக்குக் கொண்டு வரல் வேண்டும்.

மேலே கூறியவற்றில் சிலவற்றைச் செய்து முடிக்கப் பொருள் உதவி தேவை. தமிழ் நாட்டில் பொருள் படைத்தார்க்குப் பஞ்சமில்லை. இவரில் சிலராவது தம் செல்வம் இத்துறைகளில் பயனுமாறு செய்தல், இவர் தமிழ் நாட்டில் பிறந்ததற்குச் செய்யும் சீரிய கைம்மாறாகும். தமிழ்ச் செல்வர்கள் இதை உன்னி, "செல்வர்க்கே செல்வந்தகைத்து" எனும் பொருண்மொழிக்கு இலக்கணமாவார்களாக. ஊருணி நீர் நிறைந்தது போலவும், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தது போலவும், இவர் செல்வம் இத்தூயதொண்டிற்குப் பயன்படுவதாகுக. ஒவ்வொரு தமிழனும் விடாமுயற்சி கொண்டு இத்துறையில் உழைப்பானாயின், ஊழையும் உட்பக்கம் காண்பதில் தினைத்துணையும் ஐயமில்லை. வினைத்திட்பமென்பது ஒருவருக்கு மனத்திட்பமே யாகலான், யாரும் தாம் முற்படும் வினையில் சலியாத நம்பிக்கை கொள்ளல் வேண்டும். தான் செய்யப் புகும் இவ்வேலை விழுமிய நோக்கங்களை யுடையதாதலாலும், முடிவில் யாவருக்கும் இன்பமே பயத்தலாலும், தகை மாண்ட தக்கார் துணை கொண்டு, எத்துன்ப மிடைவரினும் சகித்து, ஒவ்வொரு தமிழனும் இச் சிறந்த கடமையை மேற்கொள்வானாக.

இதுவே எல்லா மக்களையும் ஒருமுகப் படுத்தச் சாலச் சிறந்த வழியாம். இன்றைய உலகம் பல்வகையில் பிரிந்து பிணங்கி இடருற்று வருவது கண்கூடு. "நாகரிக உலகம்" இன்று அழுக்காறு அவா வெகுளி வன்கண்மை உயிர்க்கொலை முதலிய பேய்க்குணங்களுக்கு இரையாகி வருதல் ஒரு தலை. திருவள்ளுவரின் அறநெறியின் வழி உலகம் நிற்குமாயின்: அது உலகோர் துன்பம் நீங்கி வேண்டிய வேண்டியாங்கெய்தற்கு உறுதுணையாக விளங்கும். ஒற்றுமையாஞ் செல்வத்தை அடைந்து அமர வாழ்வெய்துவர். அந்நாளே உலகெலாம் இன்ப வெள்ளம் ஊற்றெடுத்தோடக் காணும் நன்னாள். அந்நாளை அண்மையிலேயே நாம் காண இறைவன் இன்னருள் பாலிப்பானாக.

சாதிமதச் சச்சரவேன்? மேல்-கிழக்குச்
சழக்குகளேன்? சகத்தீர் வம்மின்!
மேதினியுண் டான பொழுதுண்டான
பொதுநெறியை விளங்கக் காணீர்!
தீதிரிய நலம்பரவத் தேவர்திரு
வாய்மொழியை யியல்பாய்ப் போற்றி
யோதியுணர்ந் தெல்லாரும் ஒற்றுமையாய்
வாழ்ந்திடுவோம்! உண்மை வேல்க!

(தமிழணங்கு) சுவாமி சுத்தானந்த பாரதியார்.

ஈ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

1. அ. அருமை வாலிபர்களே! எதிர்கால உலகம் உங்கள் கையில் உள்ளது. நீங்கள் பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்; தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்; கல்வி இரண்டையும் உங்கள் கைத்தலத்தே காண்மின்; கற்றற்குரிய இளம் பருவத்தை நழுவ விடாதீர்கள். காலம் கழியின் மீண்டுந் திரும்புதல் அரிது. இளமை கழியின், முதுமை வந்தெய்தும்; அப்பருவம் உங்கள் கல்விக்கு உதவாததாகும். உங்கள் குலத்தை நோக்குங்கள். நாகரிகம் முதிர்ந்துள்ள இக்காலத்தில் நுங்குலம் பணிபூண முன் வாருங்கள்.

செங்குந்தர் மாநாடு) திருவாரூர் சபாபதி முதலியார்.

ஆ. சமுகத்தொண்டிலீடுபடுவோர் முதல் முதல் தன்னைத்தானே தூய்மை வாய்மை பொறை தன்குற்ற முணர்தல் ஆண்மை வீரம் விடா முயற்சியாகிய நற்குண நற்செய்கைகளால் திருத்திச் சீர்படுத்திக்கொள்ளவேண்டும்.

உலகம் புகழ்வது பொருள். பொருளாதாரமே சீவாதாரம். "பொருட்ளைப் போற்றி வாழ்" என்பது அனுபவப்பழமொழி. ஆகையால் பொருளாதாரத்தை விருத்தி செய்ய முன் வாருங்கள். ஒற்றுமையைக் கடைப்பிடித்து ஒழுக்கத்தால் மேன்மை யடையுங்கள். பாலிய விவாகத்தைத் தள்ளி ஒற்றுமைத் திருமணங் கொண்டு, குடும்ப விருத்தியீடுபடுங்கள். கட்சிச் சண்டையைத் தகர்த்து, மதுபானம் வஞ்சனை பொய் சூது புலால் இலாகிரிப் பொருள்கள் உபயோகித்தல் முதலிய தீய வழக்கங்களை யறவே யொழித்து, அவை மீண்டும் தலையெடுக்கா வண்ணம், ஆம் வழி தேடுங்கள்.......விழிமின் ! எழுமின் !! கருதிய கருமம் கைகூடும்வரை உழைமின் !!!
(செங்குந்தர் வாலிபர் மாநாடு)

காஞ்சிபுரம் இராமலிங்க முதலியார்.

II. வெள்ள முட்டை கோண்டேறும்பு மேட்டிலேறுதே—மலை
மீது மஞ்சு தான்றவழ்ந்திப் போதுகூடுதே
பள்ளமதி னீர்த்தவளை துள்ளியார்க்குதே—வானம்
பாடி யாடித் தன்னினத்தைக் கூடச் சேர்க்குதே
உள்ளமகிழ்ந் தன்றிற்குரல் வெள்ளமாக் கேட்கே—ஞெண்டு
மோடியோடிச் சேற்றின் குழி மூடிக்கோள்ளுதே
தேள்ளு தமிழ் மாந்தைப் பண்ணைப் பள்ளரே நன்றாய்—மழை
சேழிக்கவும் பெய்யுஞ் செல்வங்கள் கோழிக்கவுந்தானே.

மாந்தைப் பள்ளு.

III. 1. மலையடிப்புன்சேய் மதகடிநன்சேய்.
2. மூலக்காறறுக்கு புழுவிழும்..
3. எறும்பேறில் பெரும்புயல்வரும்.
4. சோதிமின்னிடில் சோறகப்படும்.
5. வானம் போழியவேண்டும் பூமி விளையவேண்டும்.
6. குட்டிக்கலகம் பண்ணுகிறவன் குத்துப்பட்டுச்சாவான்.
7. குண்டிகாய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்.
8. குதிரை எட்டடி பாய்ந்தால் குட்டி பதினறடி பாயும்.
9. காவடிப்பாரம் சுமக்கிறவனுக்குத் தேரியும்.
10. கிணற்று ஆழமும் கயிற்று நீளமும் பார்.

IV. 1. உலோபிக்குக் குருவும் குற்றமுமில்லை; பசியுடையோருக்குப் பாகமும் சுவையுமில்லை; கல்வியில் விருப்பமுடை யோருக்கு நித்திரையும் சுகமுமில்லை; காமுகருக்கு அவமானமும் பயமுமில்லை.

நீதிவெண்பா.

2. "சிந்திப்பவனுக்கு வாழ்க்கை ஒரு வேடிக்கையாகத் தோன்றும்; அனுபவிப்பவனுக்கு அதுவே பெருந்துன்பமாகத் தோன்றும்."

சுவாமி விவேகானந்தர்.

3. 'தாய் நாட்டையும் தாய் மொழியையும் புறக்கணிப்பவன் ஒரு பாதகன். உலகத்தோடு ஒட்டி வாழ அவன் அருகனல்லன். அவன் செய்ந்நன்றி கொன்ற பதர்."

Sir Walter Scot.